[illegible]

V 4 No. 38 24 Feb 1931

JL
m211, N28KN
M31·4·38
188936

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஹு செப்டம்பர் மீ 24உ [No. 38.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 741
2. கம்பராமாயணம் (வனம்புகு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 743
3. ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 746
4. தெய்பரதேவர் சரிதம்
Dr. V. S. அருணாசலப்பிள்ளை 748
5. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் - 125—137)
K. இராமரத்னம் ஐயர் B A. 751
6. யாப்பிலக்கணம் (கலிப்பா) 753
7. களவியற்றுறை விளக்கம்—'சம்பந்தன்' 754
8. வர்த்தமானம். 759

## கலாநிலயம்

### மறப்பது முறுதியாமே 3.

18893

கடவுள் இல்லையென்னு மவ்வெதிர்மறை வாசகம் இயங்குவதற்கு இயல்வதாகின்ற ஓர் உள்ளுறை யுண்மையின் இரகசியத்தை ஆதாரமாகக் கொண்டே தத்துவநூல் வல்லுநர் சிலர், அக்கடவுள் இருக்க வேண்டுமென்பதே இன்றியமையாததென வாதித்த முறையின் நுண்மையையும், அதனால் கைவந்த அக் கடவுளின் மெய்ம்மையையும் முன்னோாள் முயன்றுரைத்தோம். ஆதலின் கடவுளை மறுத்தலால் அக்கடவுள் இருக்கின்ற உறுதி பின்னும் வலிவடைகின்றது. எனின், நாத்திகர்களால் கடவுளெய்தும் உறுதி இது வென்னல் மிகையன்று. இனி அத்தகைய நாத்திக இயக்கங்களால் அந்நாத்திகர்களேனும் மற்றுள மக்களேனும் பெறவல்ல நற்பயன்கள் சில உளவாகலாம் என்பதன் அமைதியை ஒருசிறிது இங்கு ஆராய்வோம்.

கடவுள் உண்டு என்னும் சொல் பொய்யாகுக; அல்லது கடவுள் இல்லை என்னும் சொல் பொய்யாகுக. அந்தரம் நோக்கின் இவ்விருவகை எதிரெதிர் வாசகங்களை வழங்கவைக்கின்ற மானுடமனத்தின் மூலமாம் நோக்கம் ஒன்றே. பொய்யுரைக்கு ஆதாரமாகின்ற மனத்தின் தத்துவம் யாதெனச் சிறிது சிந்திக்குமளவில் இவ்வொற்றுமை புலப்படும். ஒருவனுடைய ஆசைக்கும் அச்சத்திற்கும் புகலிடமாவது பொய். இவ்விரண்டையும் வேறு வேறு பிரித்துக் கூறினுமாயினும் எல்லாப் பொய்களினும் ஆசையும் அச்சமும் ஒவ்வோரளவு கலந்தேயிருக்கும். அவ்வளவின் மிகுதிபற்றி ஒன்றினை ஆசையால் விளைந்த பொய்யென்றும், மற்றொன்றினை அச்சத்தால் விளைந்ததென்றும் கருதும்படி நேர்கின்றது. ஐம்பது ரூபாய் சம்பளமுடைய ஒருவன், நூறென்று உரைக்குங்கால் தனக்குச் சம்பளம் நூறாய் இருந்தாற்றான் ஆகாதோ என்னும் அவ்விழைவை முன்னிட்டு உரைக்கின்றான் என்பதை உணர்தல்வேண்டும். தனக்குச் சம்பளம் நூறு என்ற பொய்யை வாயானது வழங்கிக்கொண்டிருக்குமப்பொழுதே அவன் மனத்தின்கண், "ஐயோ, இப்படி ஐம்பதே சம்பளமென்றால் இவரென்னை மதியாரே, ஆதலின், நூறு என்ற பொய்யை இப்பொழுது நான் உரைக்க வேண்டி வருகின்றதே. உண்மையோ தெரிந்துவிட்டால் அவமானம் பின் பெரியதாமே. நூறேயாகத்தான் என் சம்பளம் இருக்குமாயின் இப்பொழுது இந்தப் பொய்யை இயம்பாதிருக்கலாம் அன்றோ. எப்பொழுது எனக்குச் சம்பளம் நூறு ஆகுமோ, எப்பொழுது அதனைப் பொய்யென்பதின்றிப் புகலுவேனோ' என, பற்பல எண்ணங்கள் நிகழ்வதியற்கை. இதனில் தன்னைப் பிறர் மதியாரோ என்னும் அச்சமும், தானிப்பொழுது பொய்யாய்ச் சொல்கின்றவொன்று மெய்யேயாய் அமையவேண்டும் என்னும் ஆசையும் கலந்திருக்கும் கொள்கை காணக்கிடக்கின்றது. ஆயினும் அவ்வச்சத்தினும் ஆசையின் பாகமே அதிகமெனக் கருதலாம். இனி, திருடினேன் ஒருவன் தான் திருடியதில்லை என்று உரைக்குங்கால், தண்டனையின்

3ட
11 | N28 KW
NB1/420

அச்சத்தோடு திருடிய பொருள் திருடாமலே தன்னுடையதாய்இருந்திருந்தால் ஆகாதோஎன்னும் ஆசை, ஆகியஇவ்விரண்டும் கலந்திருப்பினும் இப்பொய்க்குப் பெரும்பகுதி தண்டனையின் அச்சமே காரணமாகக் காண்பீர். அயலான் ஒருவன் மேன்மாட வீடு கட்டுவதைக் கண்டு அழுக்காறடைந்த வொருவன், இன்னொருவனிடத்தில், "கடன்வாங்கியன்றோ அவன் அத்துணையும் வீடுகட்டுகின்றான். ஈட்டியபொருளால்இது இயற்றுகின்றான் என்று எண்ணாதே. அவன் கடன் வாங்கிய விடமெல்லாம் நான் அறிவேன். சில பத்திரங்களுக்குச் சாட்சிக் கையெழுத்து நானே இட்டிருக்கின்றேன். நாளைக்குக் கடன் முழுகி வீடு விலைக்கு வருகின்றபோதன்றோ அவன் வாழ்வு தெரியப்போகின்றது" என்பதனைய பொய்யுரைகள் எதனாலெழுகின்றன? தன் கண்கரிக்க மனையெழுப்பும் அவ்வயலான் பாழாகவேண்டும் என்னுமொரு விழைவையே, அவ்வாறு ஆகிவிடுவான் என்னும் உறுதியாய்த் திரித்துக் கொடுக்கின்றது அவன் மனம். மற்றவன் செல்வத்தின்முன் தன் ஏழ்மை தெரியக்காணுமே என்னும் அச்சமும் ஒருபுறம் இவனை உழக்கி நிற்கும். இவ்வண்ணந் தனக்கொரு நலமேனும், பிறர்க்கொரு கேடேனும் (அப்பிறர் கேடும் இறுதியில் தன்னுடைய நலத்திற்கு ஆதாரமாகின்ற கருத்தும் அதனுள் அடங்கியிருக்கின்றது)-எய்தவேண்டும் என்னும் விழைவு தூண்ட, அந் நலமுங் கேடும் உண்மையல்லாதிருக்கவும், அவ்விழைவின்படியே வந்தடைந்துவிட்டாற்போல் உரைக்கவைக்கின்ற மனத்தின் வஞ்சனைதான் பொய்யினங்களின் பெரும்பகுதிக்கு ஆதாரமாகின்றது. இக்கொள்கையைக் கடவுள்திறத்தில் சார்த்திப் பார்ப்போமெனின் சிற்சில இரகசியங்கள் தெரியவரும். உலகப் பொதுமக்களில், கடவுளொன்று உண்டென்பாரிற் பெரும்பகுதியோர், உரையளவு உறுதி செறிந்திருக்கலாமாயினும், அவர் உள்ளத்திற்கும் உள்ளே, "ஒருகால் கடவுள் இல்லையேதானோ, யாதோ, யார் கண்டார்," என்னுமோர் ஐயம் சிறிது சிறிது தலைகாட்டலாவது புதுமையன்று. ஆதலான், அவ்வையத்தை விளம்பாமல், 'கடவுள் உண்டு' என்ற மட்டில் உரைப்பது ஒருவிதத்தில் பொய்புரை எனத் தகுந்ததாகும். ஆயினும் பொய்போன்ற அவ்வுரையைப் புகல்வதன் கருத்தென்ன? தூய்மையும் அன்பும் நீதியும் அலகிலாத கடவுளென்ற பொருளொன்று இருக்கவேண்டி விழைகின்ற அவர் உள்ளத்தின் நாட்டத்தை நவில்வதல்லால் வேறன்று. கடவுள் இல்லையென்பார் செய்தியும் இதுபோன்றே முடிவதாகும். "கடவுள் இல்லை இல்லை" என்று நாத்தடிக்க எத்துணை உறுதியாய்க் கூறினும் இவ்வினத்தினோர் உள்ளத்தினுள்ளேயும், "ஒருகால் அக்கடவுள் இருக்கின்றதோயாதோ, யார் கண்டார்" என்னுமோர் ஐயமில்லாமற் றீராது. ஆதலின் அந்த ஐயத்தினை அடக்கி அடக்கிக் கடவுளை உறுதியாய் மறுத்து மாத்திரம் கூறுகின்றபோது இவர் பொய்யே புகல்கின்றார் என்று கொள்ளவேண்டும். தன்னெஞ்சு அறிவதற்கேனும் அயிர்ப்பதற்கேனும் மாறாகக் கூறுவதே பொய்யின் இலக்கணம். இதன்படி, மெய்யுணர்வு முதிர்ச்சியுற்ற சில மேன்மையோர்தவிர ஏனையோர் கடவுளுண்டென்றுரைக்கும் வாசகமும், கடவுளில்லை யென்றுரைப்போர் [illegible] அவ் [illegible] ரவர் நெஞ்சு அயிர்ப்பதற்கு மாறாக நிகழ்வதால் அவரவரளவு பொய்யுரைகளெனவே கருதும்படி முடிகின்றன. இப் பின்னினத்தோர், கடவுள் உளதாகிலும் ஆகலாம் என்ற ஐயத்தைப் பின்தள்ளி, இல்லையென்றே முன்னுரைக்கப் புகுவதன் காரணம் என்ன? தம் மனம்போன போக்கெல்லாம்போய்த் தம்யாக்கைக்கே இரைதேடித் திரியுங்கால் புரிவன பல பாவமாதல் பற்றிக் கடவுள்தான் உண்மையாயின் அப்பாவத்திற்குரிய தண்டனை தப்பாமல் வாய்க்குமே என அஞ்சினர்களாய், அந்தக் கடவுள் இல்லாததே யாமாயின் கூசாது தாம்கருதியபடியெல்லாம் செய்யலாமேஎன்ற கொள்கையாய், அக்கடவுள் இல்லாமையை விழைகின்றனர். ஆதலின், கடவுள் இல்லை என்றொருவன் உரைக்கும்போது தன் னெஞ்சு அறிந்ததொன்றை உரைப்பவனுதலைக் காட்டிலும் தன்னெஞ்சு விழைவதொன்றையே விளம்புகின்றவனாகின்றான். எனின், பொதுப்படக் கூறுமிடத்து, கடவுள் உண்டு என்ற வாசகமும், கடவுள் இல்லையென்ற வாசகமும், அவரவர் நெஞ்சின் அறிவிற்கு மாறாக வருகின்றனவேனும் அந்நெஞ்சின் விழைவிற்கு நேராகவே நிகழ்கின்றன என்னும் நுண்ணியபொருள் இங்குமுன்னுரைத்தவைகளால் விளங்குதல் வேண்டும். பொதுமக்களால் வழங்கப்படும் நாத்திகப் பேச்சிலும் ஆத்திகப் பேச்சிலும், பல்வியல்நெறியில் பார்க்கும் யார்க்கும இல்லையுண்டென்ன நிற்கும் அப் பரம்பொருளை வேண்டியும் வேண்டாதும் தூண்டும் ஓர் விழைவே பொதிந்திருக்கின்றதென்னின், அச்சத்தால் ஓர் சூனியத்தை விழைவதினினும் ஆசையோடு ஓர் அன்புவடிவாய் ஆனந்தமயமாய் எங்கும் நிறைந்த பொருளை விழைவதால் நலமொழியத் தீதில்லை என்று நாம் பலபட நவிலல் வேண்டுமோ! பொய்தான் புகல்வதெனப் புகுந்தாலும், "கடவுளைக் கொன்றேன் யான்" எனும் வீண் பழியைத் தேடாமல், "கடவுளைப் படைத்தேன் யான்" என்னும் புகழை நாடுவோர் இடறியிடறியேனும் உய்யும் நெறியில் ஒருநாள் நடப்பவராவார். அதுவுமன்றி, உள்ளுவோர் உள்ளுந்தோறும் கருத்தெலாம் மணந்து சுரக்குமக் கடவுளென்னுந் தத்துவ அமுதினைப் பருகப்பயிலாமல் தம் வாய் வழிந்த எச்சிலை வாளாறுகர்ந்திருக்க நேர்வது என்ன மாயமோ மதியோ யார்செய்த பாவமோ தெரிந்ததில்லை. உண்டு இல்லை என்னுமவ்விரண்டும் விழைவினால் விளைந்த பொய்யெனக் கொள்ளுமிடத்தும் விழுப்பொருளை விழைந்ததொரு பொய்யாதல் சீரிய பயனும் சிறப்புமுடைத்து.

தன்னை மறுக்கவைத்துக்கொள்ளுமாற்றால் கடவுள் தன துண்மையை உறுதிசெய்து காட்டுகின்ற முறையினை இதுகாறுங் கண்டோம். இனி, இவ்வுலக மக்களின் மிகப் பெருந் தொகுதியோர், கடவுளை மறுப்பாரும் அலர்; உணர்ந்தவர்களாய் ஒழுகுவாருமலர்—கடவுளைப்பற்றி நினைக்காதவர்களேயாய் விவகரிக்கின்றனர். கடவுளைப்பற்றி மாந்தர் யாதும் மனதென்பதற்ற நிலையிலே இருக்கின்றனர் என்னலாம். கோயிலிற்கும் திருவிழாக்களுக்குஞ் செல்லலாம், தத்தம் மதங்களுக்குரிய மகாநாடுகள் கூடலாம், மதக்கல்வியும் பிரசாரங்களும் மிகவும் அவசியம் என்று வற்புறுத்தலாம்—எல்லாம் செய்யலாம்; [illegible] னும் இன்னவர்களில் ஒருவர் இருவரேனும்

சென்னை-600 008



கடவுளைத் தம் கருத்தினால் அரைக்கணம் நினைத்ததுண்டோ என்று ஐயம் எய்துவது வீணன்று. கடவுள்நினை விருப்பதற்கு எவ்வித அடையாளமும் அவர் வாழ்க்கையில் காணப்படுவதில்லை. எல்லாம் ஈசன் செயல் என்று ஓயாது மொழிகின்ற வாயினரேனும் தம் செயற்கே தலையிடந்தந்து விவகரிக்கும் விபரீதத்தைத் தெரிந்துகொள்ளவும் அவர்களுக்கு மதிவன்மை போதாது. கடவுளை வாவாவென் றழைத்துக் கொண்டே அக்கடவுள் வரக்கூடிய வழிகளைஎல்லாம் இருப்புக் கபாடமிட்டு அடைத்துவிடுவார். பொதுஜனமனம் இதுவாக இவ்வேளையில், ஒரு சிலர் ஒன்றுகூடி நாத்திகத்தை நிலைநாட்டத் தலைப்படுதல், மக்களின் கருத்தினின்று நீங்கிய கடவுளை மீண்டுங் கொணர்ந்து மானுட வாழ்க்கையை ஆட்சிபுரியும் வண்ணம் அரியாதன மமர்த்தும் என்று யாம் நம்பத்துணிகின்றோம். இந்நம்பிக்கைக்கு ஆதாரமாய சில தத்துவங்களை இனிக் காண்போம். மதியைக்கெடுத்த தெய்வம் கண்ணைக் கொடுப்பினும் கொடுக்கலாம்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம் — 7. வனம்புகு படலம்.

[734-வது பக்கத் தொடர்ச்சி.]

### சீலத்தால் சேரும் நலம்.

அலகிலா வுதவிசெய்திவ் வுலகினுக் கின்பமு மன்புமமைதியு மூட்டவல்லது சீலமன்றி வேறோர் சாதனமில்லை என்னு முண்மையகலா உளமுடையவர்களில் முதன்மையோர் கரைசெயற்கரிய கலைகளில் கருத்துடைய கம்பர்பிரான். எவ்வுயிர்மாட்டும் செந்தண்மைபூண்ட சீலமுடையோர் சிலர் இருப்பாராயின் இவர் வெளிப்படையாய் முயல்வதும் செய்வதும் அனைய கருமங்கள் யாதுமின்றியே, அவ்வவ்வுயிர்களுக்கு ஆங்காங்குத் தண்மையும் இன்பமும் தாமேசென்றடையும். உலகத்தின் வெம்மையும் பகையும் அறியாமையும் நீங்குதற்குச் சான்றோர் ஒருவரிருவர் இருக்க வேண்டுமேயன்றி வேறொன்று முயல்வதெல்லாம் மாறாகமுடியும். சீலமும் சிறப்புமற்ற ஆள்வினைகளாலும் யந்திரச் சூழ்வினைகளாலும் பொருள்நூல் புரட்சிகளாலும் உலகத்திற்கு எத்துணை நலங்கள் எய்தின காண், என்ற சொல்லெலாம் இன்றைக்கு அவலமாம்படி அவ் வெந்திரசாத்திரப் பொருள்நூல் ஆள்வினைத் தந்திரிகள் பறக்கவிட்ட போலிப்பதாகைகளனைத்தும் பரிபவத்தால் பீறிப்போக, பசியும் பிணியும் பகையும் வறக்கின்ற வெய்யிலினாற்றானே மக்கள் அடியுடன் மடிகின்றனர். இந்த வீண்வினையாளர் கால்வைத்த விடமெல்லாம் வற்கடமே தொடர்ந்தழிக்க,

பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னு
மீரமு முளதில்லென் றறிவரு மிளவேனில்
ஆரியன் வரலோடு மமுதள வியசீதக்
காருறு குறிவானங் காட்டிய தவணெங்கும்

[புல்லர்கள் புணர்கின்ற வேசியர்தம் மனம்போல், தங்கிய ஈரம் உண்டோ இல்லையோ என்று தெரிவதற்கருமையான இளவேனிற்காலமானது, உத்தமனான இராமன் வந்தவுடன், அமுதம் பொருந்திய குளிர்ந்த மேகங்கள் கூடும் அடையாளத்தை அவ்விடமெங்கும் வானத்திற் காட்டியது]

இவ்வண்ணந் தண்ணென்றுப அத்தடத்தினூடே, பிறந்திலாக் குகனெனுமப் பெருமகனைக் கோசலைக்கொரு பிள்ளையா யழைத்துதவி உவந்திருந்த சிந்தையோடும் இராமன் இனிது நடக்கலுற்றான். வல்லுருவ வனசரனை மெல்லிதய மனிதனாக்கித் தன்னினமாய்க் கொண்டதுவும் வள்ளல் குணம்; வெயிலும் இளநிலவேபோல் விரிகதி ரிடைவீசும்படி புரிந்ததுவும் இராகவன் வரவு. அன்னவர் அவ்வயின் காட்சிகள் காண்குநர் கருத்தொடு நடந்தார். அந்நெறியின்கண் தோன்றிய சில காட்சிகளை இராகவன் தன் காதலிக்குக் காட்டியவாறே நாமுஞ் சிறிது காணலாம்.

பாணின மிஞிறுகப் படுமழை பணையாக
நாணின தொகுபீலிக் கோலின நடமாடல்
பூணிய நினசாயல் பொலிவது பலகண்ணிற்
காணிய வெனலாகுங் களிமயி லிவைகாணாய்

[உன்னைக்கண்டு நாணங்கொண்டு தம்தோகைகளை முன் சுருக்கிக்கொண்டவை இப்பொழுது, வண்டுகள் பாணர்களாகவும், மேகம் முழவாகவும் தம் கலாபத்தை விரித்து நடனமாடுவதை மேற்கொண்டது, விளங்குகின்ற உனது சாயலைப் பலகண்களால் காணும்பொருட்டே என்னும்படியாய களிப்புடைய இம்மயில்களைக் காண்]

நெய்ஞ்ஞிறை நெடுவேலி னிழலுறு திறமுற்றிக்
கைஞ்ஞிறை நிமிர்கண்ணாய் கருதின னெனமென்றே
மெய்ஞ்ஞிறை விரிசாயல் கண்டுநின் விழிகண்டு
மஞ்ஞையு மடமானும் வருவன பலகாணாய்

[நெய்பூசிய பெரிய வேலின் ஒளிபொருந்திய ஆற்றல் முதிர்ந்து, குடங்கையைவிட அகன்ற கண்களையுடையவளே, உன் மேனியின் சாயலைக்கண்டு மயிலும், உன் விழியினைக்கண்டு மானும், உன்னைத் தம் இனமென்றே கருதி நெருங்கி வருவதைக் காண்]

அடியிணை யுறைகல்லா வென்றுகொ லதரெங்கு
மிடையிடை மலர்சிந்து மினமர மிவைகாணாய்
கொடியினொ டிளவாசக் கொம்பர்கள் குயிலேயுன்
துடிபுரை யிடைநாணித் துவள்வன விவைகாணாய்

[குயில் போன்றவளே, உன்பாதங்கள் கல்லுறுத்த நடந்து பழகின வல்லவென்று இரங்கித்தானோ, நம்வழிமுழுதும், அவ்வவ்விடங்களில் மலர்களைத் தூவியிருக்கின்றநல்ல மரங்கள் இவைகளைக்காண். கொடிகளும், வாசனைபொருந்திய இளம கிளைகளும், உடுக்கைப்போன்ற உன் இடுப்பிற்குத் தோற்றுத் துவள்கின்றன காண்]

காதலரிருவர் களிப்புக் கைம்மிக உரையாடுங்கால் நலம்புனைந்துரைத் தியம்பும் நயமொழிகள் இவை. இல்லாளகத்திருக்க இராமனுக்கில்லாத தொன்றில்லையாதலின், அவன் இழந்த அரசினை நினையாதது ஓர் விந்தையன்றெனினும், பிரிந்ததன்குரவர்முதலாயினோரையும் இப்பொழுது இனிமையே நிரம்பியதன் மனத்தினாற் சற்றே மறந்தனன்போலும். சீதையின் சிந்தையெல்லாம் இவ்வமயம் எங்கிருந்ததோ அறிகிலேம். தன்பொன்னிறப் பூவையையுங் கிளியையுந் தங்கையர் தக்கவாறு போற்றுகின்றனரோ அல்லரோ வென்று

அவள் உள்ளம் அலேந்துகொண்டிருப்பினுமிருக்கலாம். ஆதலாற்றான் அவள் இராமன் காட்டிய காட்சிகளேக் குறித்தொன்றும் எதி ரிபம்பினு ளலள். இத்தகைய தோர் காதல்வளர் செவ்வியில் இருதிறத்தும் உரை நடக்குமாயின் ஊடல் ஒன்று இடைப்புகுந் தழக்க நேர்வது திண்ணம். அஃதிங்கு நேராமையால் இராமன் தன்னேடு சீதை ஊடிக் காட்டும் நலத்தைக் காண்பதற் கமைந்த தன் அவா கைவராமை யுணர்ந்து வேரூர் ஊடலேக் குறித்தேனும் அவளுக்கு நினைவுண்டாக்க முயன் றவன்போல்,

பூவலர் குரலோடும் புடைதவழ் பிடவினு
மாவலர் சொரிசூழற் றயிலெழு மயிலொன்றின்
தூவியின் மணம்நாறத் துணைபிரி பெடைதானச்
சேவலொ டுறவூடித் திரிவத னியல்காணுப்

[மலர்கள் மலர்ந்த கொத்துக்களுடன் பக்கத்தில் பரவுகின்ற பிடவமரம் பூத்த சிறந்த மலர்கள்சொரிகின்ற இந்த இடங்களில், கித்திரைநீத்தெழும் ஒரு ஆண்மயிலின் கலாபத்தில் மலர்மணம்வீச, தன் துணையைப் பிரிந்திருந்து இப்பொழுது வந்துசேர்ந்த பெண்மயில், (பிற பெண்மயில்களோடு சேர்ந்ததாற்றான் இதற்கு இம்மணம் வந்ததென்று எண்ணி) தன்சேவலோடு மிகவும் ஊடல்கொண்டு திரிகின்ற தன்மையைக் காண்]

என்றான். ஆயினும் அத்திருமகள் இவ்வேளை ஊடுதற் குளங் கொண்டிலள்.

இவ்வண்ணம் இனியன பலகண்டு விளையாடினராய் வழிநடந்தவர் அந்திவந் தடையும்வேளையில் பரத்துவாச முனிவர்தம் ஆசிரமத்தருகு அண்மினர். அவ்வயின், ஆசையால் விம்மும் அன்பினனும், தான் செய்த நெடுந்தவப் பயன் முற்றியதென்று நன்கு தெரிந்தவனும் ஆய அம்முனிவரன், பிறவிநோ யறுக்கும் மருத்துவன் அனைய இராமனை வரவெதிர்கொள வந்தான். அத் தபோதனன் பெருமையை,

செந்தழல் புரிசெல்வன் திசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரெனநல்கு
மந்தண னுலகேழு மமைவெனி னமரேச
னுந்தியி னுதவாமே யுதவிடு தொழில்வல்லான்.

[செவ்விய அக்கினிகாரியங்களைத் தவறாமற் செய்கின்ற செல்வன். பிரமன் செவ்விதின் படைத்த உயிர்களையெல்லாம் தன்னுயிரொப்ப ஓம்பும் குளிர்ந்த அருளுடையவன். எழுலகங்களையும் படையென்றாலும் திருமாலின் உந்தியின் உதவியின்றித் தானே படைக்கவல்லன்]

என்று மகிழ்ந்து பாராட்டுகின்றனர் கம்பர். அனைய தோர் அருந்தவமுனிவனை இராமன் வணங்கியபின், அயோத்தியை யாளாமல் தவவேடந் தாங்கினராய் அடவிசேர்ந்த தேனென வினவிய அம்முனிவரற்கு,

உற்றுள பொருளெல்லா முணர்வுற வுரைசெய்தா
னற்றவ முனியந்தோ விதிதரு நவையென்பா
னிற்றதுசெய லுண்டோவினியெனவிடர்கொண்டான்
பெற்றில டவமந்தோ பெருநில மகளென்றான்

[நிகழ்ந்தவைகளை எல்லாம் இராமன் தெரியக்கூறினான். நற்றவமுடைய அம்முனிவன், "ஐயோ, இது விதியின் பிழை" என்றுகூறி, இதனினும் கொடியதோர் செயல்இனி உளதோவென வருந்தி, பெருமையுடைய நிலமடந்தை இவனால் ஆளப்பெறும் பாக்கியத்தைச் செய்திலள்' என்றான்.]

இவையெலாம் விதியின்பிழையென்று இராமனுக்கு நிகராக உணர்ந்த அம்முனிவன், நற்றவப்பயனெய்தா தலமந்த நிலமடந்தையைப் பரிந்து குகனுக்கு நிகராக வருந்திய பரிசு மிகவுஞ் சிறந்தது. அறிவினால் இறைவனே போன்றாரேனும் அன்பினால் அவன் அடியாரைப் போல்வார் மேலோர்.

பின்னர், பரத்துவாசன் அருத்தியோடளித்த நல் விருந்துண்டிருந்து பிற்றைப்பகல் அவன்பால் விடைகொண்டு சித்திரகூடப் பருப்பதமடைய வழிக்கொண்டு, சிறுமான்கன்று நீர்நுகர் காளிந்தியாற்றை இலக்குமணன் அமைத்த தெப்பத்தால் கடந்து ஏகும் நெறியில், "சினையும் மூலமும் வேரும் வெந்து இருநிலந் தீய்ந்து நினையும் நெஞ்சமும் சுடுவதோர் நெடுஞ்சுரம் சேர்ந்தார். இங்குப் பாலைநில வருணனையிற் புகுந்திலர் கம்பர்; தாடகை வனத்தின்கண் தன் திறமனைத்தையும் காட்டிவிட்டார். இங்கிவர் உட்கொண்ட கருத்து வேறு. அயலவர் துயரம்தீரவேண்டுமாயின் அதற்குச் சீலமுடையோர், "இத்துயர் தீர்க" என்று பரிவுமிக்க உள்ளன்போடு நினைப்பதல்லால் செய்யற்பாலது வேறொன்றுமில்லை என்பதை விளக்கிநிற்பன பின்வரும் பாசுரங்கள். இராமன் நினைத்ததையும் அந்நினைவின் பயனாய் நிகழ்ந்த செம்மையையும் கம்பர் சொற்களோடு சிந்தையில் நிறவிக்கொள்பவர் நனிமிகச் சான்றவ ராவார்:—

நீங்க லாற்றலள் சனகியென் றண்ணலு நினையா
வோங்கு வெய்யவ னுடுபதி யெனக்கதிரு குத்தான்
தாங்குவெங்கடத் துலவைகள் தழைகொண்டுதழைத்த
பாங்கு வெங்கனற் பங்கய வனங்களாய்ப் பரந்த

[இவ்வனத்தைச் சீதை கடக்கும் வல்லமையில்லாதவள் என்று இராமன் நினைக்க, அவ்வளவிலே, சூரியன் சந்திரனேபோல் தன் கிரணங்களைச் சொரிந்தான். அவ்வெவ்விய வனத்தில் உலர்ந்திருந்த மரங்கள் தளிர்கொண்டு தழைக்கலாயின. அவ்வனத்தின் கனல் தாமரைக்காடுகளாய் மாறிப் பரந்தது.]

வறுத்து வித்திய வனையன வல்லியிற் பரற்கள்
பறித்து வித்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
வறுத்தெ ரிந்தன வல்லிக ளிளந்தளி ரீன்ற
கறுத்த வாளர வெயிற்றினு ளமுதுகக் களித்த

[வறுத்து விதைத்த விதைகளைப்போன்ற கொடிய கூரிய பரல்கற்கள், பறித்துப்போட்ட மலர்கள்போல் ஈரமும் குளிர்ச்சியும் அடைந்தன. ஒடிந்து எரிந்துபோன கொடிகள் இளந் தளிர் கொண்டன. கோபங்கொண்ட வாள்போன்ற பாம்புகளின் பற்களில் அமுதம் சுரக்க அவை களிப்படைந்தன]

குழுமி மேகங்கள் குமுறின குளிர்துளி கொணர்ந்த
முழுவில் வேடரு முனிவரின் முனிகில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட

[மேகங்கள் கூடிக் குளிர்ந்த நீர்த்துளிகளைச் சிந்தின. சிதையாத வில்லுடைய வேடர்களும் உயிர்களைச் சினந்து கொல்லாமல் முனிவர்கள்போல் ஆயினர். பசியும் பகையும் இன்றித் தழுவிய புலிகளின் முலைகளை இளமான்கன்றுகள் ஊட்டின-அல்லது :-வேடர்கள் முனிவர்களைப்போல் கோபமில்லாதவராயினர். உயிரோடு கூடிய பிராணிகளெல்லாம் பசியும் பகையுமின்றி ஆறியிருந்தன. புலியின் முலைகளை மான் கன்றுகள் உண்டன]

கல்லைக் கிடந்த கடுவெந் தயர்கின்ற கதம்பாம்
பல்ல லுற்றில வலைபுனற் கிடந்தன வனைய
வல்லை யுற்றவேய் புற்றொடு மெரிவன மணிவாழ்
புல்லெ யிற்றிளங் கன்னியர் தோளெனப் பொலிந்த



[கல் வளைகளிற் கிடந்து விஷத்தினால் வெந்து சோர்கின்ற கோபமுடைய பாம்புகள், வருந்தாமல் அலைகின்ற நீரிலே கிடப்பது போன்றனவாயின. மூங்கில்கள் புற்றோடும் விரைவாக எரிந்தழிவது நீங்கி, முத்துக்கள் போன்ற சிறிய பற்களையுடைய இளங்கன்னியர் தோள்போல் விளங்கின.]

படர்ந் தெழுந்தபுல் பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன கேகயந் தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம் வயின்றொறு நவின்ற
தொடர்ந்த பாணரிற் பாங்கிசை முரன்றன தும்பி

[படர்ந்து முளைத்த புல்லானது, பச்சைக்கம்பளம் விரித்ததுபோல் தோன்றியது. தோகைகள் விரிய மயில்கள் அவ்விடங்களில் மாதர்போல் நிர்த்தனம் செய்தன. அவர்களைத் தொடர்ந்த பாணரைப்போல் வண்டுகள் இசைபாடி வந்தன.]

கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மின்றியு முளைத்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளிம்பர்ச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ

[காலமில்லாதிருந்தும் கனிகள் பழுத்தன. பெரிய கிழங்குகள் வேர் இல்லாமலும் முளைத்தன. அந் நிலம்முழுவதும் பூங்கிளைகள் அலங்கரித்த மாதர்களைப் போன்றன. இவ்வுலகத்தில் சீல மல்லாமல் செய்யத்தக்க தவம் வேறும் ஒன்று உளதோ.]

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலாற் செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்றார் நாயனர். அத்தவந்தான் யாதெனின் சீலமன்றிப் பிறிதொன் றில்லை என்னக் கம்பர் வற்புறுத்துகின்றார். ஒருகால் தாம் வேண்டிய வேண்டியாங்கு எய்துதற்குச் செய்தவம் உதவலாம். அன்று கன்னிமாடத்தினின்று கண்ட "வள்ளல்மார்பினுள்ளுறத் திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்மினே" என்று தன் முலைகளுக்கு அறிவுறுத்தினள் சானகி. பிறர்க்கு வேண்டிய வேண்டியாங்கு எய்துவித்தற் குரிய சாதனம் யாதெனில், அன்னபடி பிறர்நலம் விழைபவன்தன் சீலமே எனச் சாதிக்கின்றார் கம்பர். ஆகலின் எல்லாரும் எங்கும் இன்புற்று இருக்க வேண்டுமென்று விரும்புவோர், எதனையும் திருத்தவும் அமைக்கவும் முயலாது தம்முடைய சீலத்தைப்போற்றி அச்சீலத்தால் நனிசெறிந்த மனத்தினைக்கொண்டு நல்லன நினைந்திருப்பதே கருவியும் கருமமும் ஆகும் எனக் கம்பர் இங்குத் தன் பேரறிவை விளம்பிக் காட்டுகின்றார். பிறர் உயரிய வாழ்க்கையடைந்து திருந்துவதற்கு எவ்வளவுச் சட்டமும் எம்முயற்சியும் எந்தச் சங்கமும் வேண்டா, சான்றோனொருவன் தோன்றுவதே போதும், என்னும் நுண்ணிய உண்மை, "எயினர் தங்கிடம் இருடிகள் இருப்பிடம் எய்ந்த" என்று அடுத்த செய்யுளில் வரும் அடியினால் ஆதரிக்கப்படுகின்றது. வேடர் முனிகிலர் கொல்கிலர், அவ ரிருப்பிடம் இருடியர் உறையுள் போன்றது. பகையில்லை, பசியில்லை. நவ்விக்கன்றுகள் புலிமுலை இனிதருந்தும். எங்கணும் வாட்டம் தீர்ந்து பட்டமரமும் துளிர்த்தன, வெந்த வேழமும் முளைத்தன. இன்னவாறெலாம் இவை ஆதல் வேண்டுமென இராமன் தனித்தனி கருதினனலன். அக்கடுஞ்சுரத்தைக்கடத்தல் சீதைக்கு அரிதெனுமொன்றையே நினைத்தான். அதற்கு, வெம்மை மாத்திரந் தணிந்தாலும் போதும்; ஆயினும் சீலமுடையோன் ஒருவருக்கிரங்கினாலும் அது யாவருக்கும் எல்லாவகையினும் உதவிய மாபெரும் பயனாவி முடிவதாகுமே. எனினும் சீதைக்கு வேண்டிய தண்மையும் எய்தியதென்பதை நினைவுறுத்துவாராகிய கம்பர்,

பந்த ஞாட்புறு பாசறைப் பொருள்வயிற் பருவந்
தந்த கேள்வரை யுயிருறத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்ததவ் வனமே.

[போர்க்களத்தில் கட்டிய பாசறைக்கும், பொருளீட்டுதல் பொருட்டும் புறப்பட்டுத் தாம் மீளும்காலத்தைக் குறித்து அகல்கின்ற கணவரை உயிர் உறத் தழுவிப் பிரிந்த நறுமணமுடைய கூந்தலையுடைய மாதர்களது சிந்தையைப்போல் கொதித்திருந்த அந்தப் பாலைவனமானது, அக் கணவர் திரும்பியகாள் இம்மாதர் மனம் குளிர்வதுபோல், இன்று குளிர்ந்தது]

என்று இனிது இயம்புகின்றார். ஓதற்பிரிவில் காதலியின் மனம் கொதியாதோ, அல்லது பரத்தையிற் பிரிந்தநாள் அவள் மனம் எய்திய வெம்மை நாயகன் மீண்டபின்னும் தணியாதோ, மற்றெது கருதியோ அவ்விரண்டு பிரிவுகளையும் கம்பரிங்குக் கூறாது விட்டார்?


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்




யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்வஸான், மதுரை.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டப்பி

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

# ஆண்டாள்

## 2. கல்வியும் கவித்திறமையும்.

[725-வது பக்கத் தொடர்ச்சி]

### (V) முல்லை.

ஆண்டாளின் பதிகங்கள் பெரும்பாலும் முல்லைத் திணைக்கென்றே அமைந்தன. ஏனெனில், ஆயர், * இடைச்சேரி, †கண்ணன், ‡ கன்றுமேய்த்தல், காடு$ கான்யாறு, குருந்து ¶ புறவு, மாலை, வாரணம், முல்லை, குழலூதல் முதலியன, முல்லைத்திணையின் பல்வகைத் தோற்றங்களாகும். அவையே, ஆண்டாளது பதிகங்களில் பற்பல விதமாய் மொழியப்பெற்றன. ஆகையால் இத்திணையின் மூவகைப்பொருள்களையும் ஆண்டாள் திருப்பதிகங்கள் வாயிலாகக் காண்போம்.

முல்லைத்திணைக்கு முதற்பொருள்கள், காடும் காட்டைச் சார்ந்த இடமும், அறுவகைப் பெரும்பொழுதும், சிறுபொழுதில் மாலையுமாம். ஆண்டாள் பெரும்பொழுது முற்றும் அவன் பற்றுண் டென்பது மொழிவதினும் சிறந்ததாய்ப் பாடலானார் $

''வாரணமாயிரம்'' என்னும் 6-ம் திருமொழியை நோக்குங்கால், விவாகச் சடங்குகள் நடப்பது மாலைப் பொழுதென்னும் விடயம் * அகச்சான்றுகளால் தோன்றுகின்றது. முல்லைக்குரிய சிறுபொழுது மாலையாதலாலும், மாலைப்பொழுதில் திருமணம் நடக்கும் வழக்கம் இக்காலத்திலும் சிலவிடங்களிற் காணப்படுவதாலும் ஆண்டாள் திருக்கலியாணக் கனவு மாலை வெளிச்சத்திலென் றனுமானிக்கலாகும். சிசுபாலனைத் †தேசழித்துக் கண்ணபிரான் உருக்குமணியை மணந்தது மாலைப் பொழுதன்றோ?

இதன்றியும் ஆயச்சிறுமியர் மாயனைத் தஞ் சிற்றில் சிதையேலென்றதும் † மாலைப் பொழுதாகவே காணப்படுகின்றது. ஆதலால் அறுவகைப் பெரும்பொழுதையும், சிறு பொழுதில் மாலையையும், ஆண்டாள் பதிகங்கள் காட்டும். இனி இம்முல்லைத்திணையிலுள்ள கருப் பொருள்களை * ஆண்டாள் பதிகங்களிற் காண்

* ஆய்ச்சி மார்களு மாயரு மஞ்சிடப்
பூத்த நீள்கடம் பேறிப் புகப்பாய்ந்து
வாய்த்த காளியன் மேல்நட மாடிய
கூத்த னார்வரில் கூடிடு கூடலே.

4-வது திருமொழி (தெள்ளியார்பலர்) - 4.

† அல்லல்விளைத்தபெருமானைஆயர்பாடிக்கணிவிளக்கை
வில்லிப்புதுவைநகர்நம்பி விட்டுசித்தன்வியன்கோதை
வில்லைத்தொலைத்தபுருவத்தாள்வேட்கையுற்றுமிகவிரும்பும்
சொல்லைத்துதிக்கவல்லார்கள்துன்பக்கடலுள்துவளாரே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்) - 10.

‡கண்ணனென்னுங்கருந்தெய்வம் காட்சிபழகிக்கிடப்பேனைப்
புண்ணிற்புளிபெய்தாற்போற் புறநின்றழகுபேசாதே
பெண்ணின்வருத்தமறியாத பெருமானரையில்பீதக
வண்ணவாடைகொண்டென்னை வாட்டம்தணியவீசிரே.

13-வது திருமொழி - 1.

$ காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்
வாட்ட மின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்ட ராவந்தென் கைபற்றித் தன்னொடும்
கூட்டு மாகில்நீ கூடிடு கூடலே.

4-வது திருமொழி - 2.

¶ காலைக் கதுவிடுகின்ற கயலொடு வாளைவிரவி
வேலைப்பிடித் தென்னைமார்க ளோட்டிலென்ன விளையாட்
கோலச்சிற்றாடை பலவும் கொண்டுநீ யேறியிராதே [டோ
கோலம் கரியபிரானே குருந்திடைக் கூறை பணியாய்.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) - 5.

$ இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழிநான்.

— (6-வது திருமொழி-8)

என்றதில் " கற்புறு சிந்தை மாதர் கணவனையன்றி வேறோர் இற்புறத்தவரை நாடார் " ஆதலால், இன்பவாழ்வுக்குரிய பரம்பொருளை ஒருபொழுதும் இடைவிடாது வருஷமூற்றும் மற்கடமென்னப் பற்றி கிற்பதைக் குறிக்கும்.

அல்வழிச்சென்ற அகலிகையை மிதிப்பது, அத்தகைய மாற்றின்பத்தில் செல்லும் எண்ணத்தையும் மிதித்துவிடவேணென்றதாகும். அவனருளாலேயே அவன்றாள் வணங்கலாகுமாதலால், அக்கிருபாநிதி "செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி அம்மிமிதிக்க'' என்னும் அடைமொழி தந்தனர் போலும்.

இம்மையில் இத்தகைய வாழ்க்கையைப் பெற்றும் மறுபிறவியுண்டோ - ஏழேழ் பிறவி எனச் சாமன்ய மானிடரைப்போல் எண்ணலாமோ வெனில், இச்சம்பந்தம் நிலைத்துழி "யானேதும் பிறப்பஞ்சேன் இருப்பதனுக்கென் கடவேன் வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்''என்ற எண்ணமேகாரணமாம். இத்தகைய பற்றுவான் அயலானல்லன், "நம்மை யுடையவன்'', அவனை நீக்கி நாம் செல்லச் சக்தியுடையோமல்லோம், அவன் பரம்பொருளாகிய நாராயணன், ஆயினும் நரனாகத் தோற்றவானுகில் ஆண்மக்களிற் சிறந்தோனாகவே தோற்றுவன், என்னும் கருத்தமைய "நம்பி''என்றனர். தன் எளிமையும் அவன் மேன்மையும் உணராது, அவன் தாளை நான் பற்றியும் பற்றாமலுமிருக்க, என்தாளைப் பற்றி " அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்'', இத்தகைய கனவும் எனக்கும் வாய்த்ததன்றோ, தோழி - என்பர்.

* கதிரொளி தீபம் கலசமுட னேந்திச்
சதிரிள மங்கையார் தாம்வந் தெதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தொழிநான்.

6. வது - திருமொழி (வாரணமாயிரம்) - 5.

† கண்ணாலம் கோடித்துக் கன்னிதன்னைக் கைபிடிப்பான்
திண்ணார்ந் திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந் திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணுமூர் பேரும ரங்கமே.

11-வது திருமொழி (தாமுகக்கும்) - 9

† இன்று முற்று முதுநோவ
இருந்தி ழைத்த விச்சிற்றிலை
நன்றும் கண்ணுற நோக்கி
நாங்கொளு மார்வந்தன்னைத் தணிகிடாய்
அன்று பாலக னாகியாலிலைமேற்
றுயின்றவெம் மாதியாய்
என்று முன்றனக் கெங்கள்
மேலிரக்க மெழாததெம்பாவமே.

2 - வது திருமொழி (நாமமாயிரம்) - 2

* நெடுமொல் குறும்பொறை நாடன் தோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி



போம். அவற்றுள் நெடுமாலான தெய்வத்தை [illegible]யாத செய்யுளில்லை. அந் நிலத்தி லுயர்ந்தோன், [illegible] நாடன் தோன்றல்'' என் றழைக்கப்படுவானாதலால், பெருமானையும் "வேங்கடநாடர்'' என்று 10-வது திருமொழியின் 5-ம் பாசுரத்தில் அழைத்திருக்கின்றார். காட்டுக்கோழி உதயத்திற்குமுன் கூவி ஆய்ச்சியரையும் மாயனையும் எழுப்பியது 3-வது திருமொழி முதலிற் காணலாகும். முல்லைநிலத்திலுள்ள குறுஞ்சுனை † குறிஞ்சியிற் காணப்படும் சுனையன்று. இதனில் நீராடல் முல்லைநில மக்களின் இயல்பு. அதற்கருகில் குருந்து ‡ நெருங்கிய நிழல்தரும். கன்று மேய்த்து விளையாடத்தக்க இடமும் அதுவாகும். ‡ இத்திணையில், இடையர் இடைச்சியர் அல்லது ஆயர் ஆய்ச்சியரிடையே, "வடுவில் கற்பின் மனைவி'' யைக் காட்ட முயல்கின்றார் கோதையார்.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை - 11.

மனித இனத்தில் ஒவ்வொரு குலத்திலும் ஒவ்வொரு தோஷமமைந்திருப்பது சகஜமாதலால், இயற்கையிலுள்ளதை மறைக்ாமலே, அதை ஒரு அலங்காரமாக்கி அகப்பொருட்டுறையிற் காண்பிப்பது கவிவரர்களின் பெருஞ்சக்தியாம். அங்ஙனமே ஆண்டாள் ஆசார சீர்திருத்தம் பாடுவது போலவே, திருப்பாவையில் சில பதிகங்களையும் பாடினர்.

முல்லைத்திணையில் காணப்படும் மிருகங்களில் புல்வாயும் † நரியும் தவிர ஏனைய மிருகங்கள் ஆண்டாள் பதிகங்களில் வரச் சந்தர்ப்பங்கள் நேரவில்லை.

முல்லைத்திணையில் புன்னைமரம் வரின் அது திணை மயக்க * மாகும். ஏனெனில் புன்னை, நெய்தல் நிலத்திற்குரிய மரம். கோபிகைகளின் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு கண்ணன் புன்னைமரமேறியதையே நாம் உற்சவங்களிற் காண்பதல்லாமலும், புராணவாயிலாயு மறிகின்றோம். ஆண்டாள், கண்ணபிரான் கோலச்சிற்றாடைகள் பலவற்றைக் கவர்ந்து எடுத்துக் கொண்டு குருந்தமரத்தி லேறியதாய் 3-ம் திருமொழியிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் கூறுவர்.† துவாரபதி கடலகமாதலால் புன்னையே புராணக்கூற்றுக்குப் பொருத்தமாகலாம். ஆயினும் தமிழிலக்கணத்தில் முல்லைத்திணையில் புன்னை பொருந்தா தாதலால் அதனினும் சிறந்த குருந்திடைக் கண்ணன் கூறையெடுத்துச் சென்றதாய்ப் பாடியது கோதையாருடைய இலக்கணப் பயிற்சியைக் காட்டுகின்றது.

இத்திணைப்பூக்களில், கொன்றை, ‡ பிடா, $ காயா ¶ முதலியன § கோதையார் பாக்களில் நன்றாய்ப்

யிடைய ரிடைச்சிய ராய ராய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
யேற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தாமுடன் வித்த
லவைகளைக் கட்ட லரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதல்
மூவின மேய்த்தல் சேவினர் தழுவல்
கமுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன் முல்லைக் கருப்பொருளே.

இலக்கணவிளக்கம் - 390.

† பரக்க விழித்தெங்கு நோக்கிப்
பலர்குடைந் தாடுஞ் சுனையில்
அரக்க நில்லாக் கண்ண நீர்கள்
அலமரு கின்றவா பாராய்
இரக்கமே லொன்று மிலாதாய்
இலங்கையை யழித்த பிரானே
குரக்கர சாவ தறிந்தோம்
குருந்திடைக் கூறை பணியாய்.

3-வது திருமொழி (கோழியழைப்பதன்) - 4.

‡ ஆவ லன்புடை யார்தம் மனத்தன்றி
மேவ லன்விரை சூழ்துவ ராபதிக்
காவலன் கன்று மேய்த்து விளையாடும்
கோவ லன்வரில் கூடிடு கூடலே.

4-ம் திருமொழி (தெள்ளியார்பலர்) - 8.

பாலா லிலையில் துயில்கொண்ட
பரமன் வலைப்பட் டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல்
வேண்டிற் றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த் தாயனாய்க்
குடந்தை கிடந்த குடமாடி
நீலார்த் தண்ணந் துழாய்கொண்டென்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்)-2

† வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவக்
கானிடை திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப...

முதல் திருமொழி (தையொருதிங்கள்) - 5

* கோமளவாயர்கொழுந்தே குருந்திடைகூறை பணியாய்!

† திணை மயக்கம்:—
"முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய''

இலக்கண விளக்கம் 394

‡ கோங்கலரும் பொழில்மாலிருஞ்
சோலையில் கொன்றைகள்மேல்
தூங்கு பொன்மாலைக
ளோடுடனாய்த் தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து
மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும்
தலைப்பெய்துவ தெஞ்ஞான்றுகொலோ.

9-வது திருமொழி 9

$ போர்க்களிறு பொரும் மாலிருஞ் சோலையம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற
கார்க்கொள் பிடாக்கள் நின்றுகழறிச் சிரிக்கத்தரியேன்
ஆர்க்கிடுகோதோழி அவன் தார்செய்த பூசலையே.

ஷை - 2

¶ கருவிளை யொண்மலர்காள் காயாமலர்காள் திருமாலுருவொளி காட்டுகின்றீர் எனக்குய் வழக்கொன்றுரையீர்

ஷை - 3

§ இந்திரகோபம் முதலியன - இக்காலத்தில் கனகாம்பரம், நீலாம்பரம், ரோஜாம்பரம், மோகனாம்பரம் என்று வழங்குவன காட்டுப்பூக்களே. அவற்றுள் ஒன்று இந்திரகோபமென் றனுமானிக்கலாம்.

பரிமளம் வீசும். எல்லாப்பூக்களிலும் இந்நிலத்திற்குச் சிறந்தது முல்லையே.

முல்லைப் பிராட்டி நீ உன்முறுவல்கள் கண்டெம்மை
அல்லல் விளையேல் ஆழிநங்காயுன் னடைக்கலம்
கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் [றே
சொல்லும் பொய்யானால் நானும்பிறந்தமை பொய்யன்

10-வது திருமொழி (கார்க்கோடல் பூக்காள்) 4.

இம்முல்லையே மன்மதன் பஞ்சபாணங்களி லொன்றாகும். இதுவே ஆய்ச்சியர் கூந்தலிற்றிகழும்*. நாயகனிருக்குங்காலை இன்பமும், பிரிந்தக்கால்† துன்பமும் கொடுப்பன இப்பூக்களாதலால் [லும்மை

"கார்க்கோடல்பூக்காள்கார்க்கடல்வண்ண னென்மே
போர்க்கோலஞ்செய்து பொரவிடுத்தவனெங்குற்றான்"

என்று முறையிடுவதைக் காண்க. அவன் உற்றபோது இப்பூங்குழல்கள் அவனைமொய்த்துப் பூக்கள்மேல் வண்டுகள் நிறைந்தாலன்ன மனமற்று, அத்துவித இலக்கணமாய் விருந்தாவனத்தில்‡ ராஸக்கிரீடையில் லயமாவதையுங் ஒழுங்கினமின்றி ஒவ்வொரு அவயவமும் தேகத்தினிடையே திகழ்வதுபோல் நிலைப்பதையும் கோதையார் சூட்சுமமாய்க் குறிக்கின்றார்.

இத்திணைக்கு உணவுப்பொருள்களாகிய வரகுசாமை முதலியவைகளை விதைத்தல் அரிதல் கட்டல் முதலியன ஆண்டாள் பதிகங்களிலில்லை. ஏனெனின், கண்ணனென்னும் காட்சியே பெருகிய அமுதமாய் அதையேயுண்டு களித்தலுடன் * அவன் மேய்க்கும் இனங்களிற் கொள்ளப்படும் பலவகைக் கறவைச் செல்வமமையப் பெற்றதால் சிறுபயிர் செய்யப் போதுமான காலமில்லை என்றும். இவற்றிற்குச் சம்பந்தமான செய்தியுமில்லை. மூவின மேய்த்துக் குரவையோடு மாலையையும் மற்றுமுள்ள ஒய்வு நேரங்களையும் இன்ப † விளையாட்டாய்க் கழித்தலும் விடியற்காலையில் மறுபடியும் துறைபடிந்து நீர்விளையாடி மீளுமே இத்திணையின் வாழ்க்கையாய் ஆண்டாள் காட்டுகின்றார்.

இத்திணையின் உரிப்பொருள் மேற்கண்டகாரணங்களால் "இருத்தலும், இருத்தல் நிமித்தமும் ஆம்" * இவ்வாறு இத்திணையின் முப்பொருள்களையும் ஏனைய தமிழ்க் கவிகள் காட்டுவதைக் காட்டிலும் மிகவும் விசேடமாய்க் கோதையார் நமதிலக்கியத்தைச் சிறப்பிக்கப் பல பாடல்கள் திருவாய்மலர்ந்தனர்.

---

* உந்து மதக்களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத் தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 18.

† மேல்தோன்றிப்பூக்காள் மேலுலகங்களின்மீதுபோய்
மேல்தோன்றும்சோதிவேத முதல்வர் வலங்கையில்
மேல்தோன்றுமாழியின்வெஞ்சுடர்போலச்சுடாதுஎம்மை
மாற்றோலைப்பட்டவர்கூட்டத்தில் வைத்துக்கொள்கிறேன்.

10 - வது திருமொழி - 2

‡ வெளியச் சங்கொன் றுடையானை
பீதக வாடை யுடையானை
அளிநன் றுடைய திருமாலை
ஆழி யானைக் கண்டீரோ
களிவண் டெங்குங் கலந்தாற்போல்
கமழ்பூங் குழல்கள் தடந்தோள்மேல்
மிளிர நின்று விளையாடும்
விருந்தா வனத்தே கண்டோமே.

14 - வது திருமொழி (பட்டிமேய்ந்து) - 8

* ஆரேயுலகத்தாற்றுவார் ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
காரேறுழக்கவுழக்குண்டு தளர்ந்து முறிந்தும் கிடப்பேனை
ஆராவமுத மனையான்தன் அமுதவாயிலூறிய
நீர்தான்கொணர்ந்து புலராமே பருக்கியிளைப்பைநீக்கீரே.

13-வது திருமொழி (கண்ணனெனும்) - 4.

உண்ணு துறங்காது வொலிகடலை யூடறுத்துப்
பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற போதெல்லாம்
திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நண்பர்களே யெண்ணுவரே.

11-வது திருமொழி (தாமுகக்கும்) - 7.

† கொம்மை முலைக ளிடர்தீரக்
கோவிந் தற்கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே
இனிப்போய்ச் செய்யுந் தவந்தானென்
செம்மை யுடைய திருமார்பில்
சேர்த்தா னேனும் ஒருநான்று
மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி
விடைதான் தருமேல் மிகநன்றே.

13-வது திருமொழி (கண்ணனென்னும்) - 9.

‡ நாணி யினியோர் கருமமில்லை
நாலய லாரு மறிந்தொழிந்தார்
பாணியா தென்னை மருந்துசெய்து
பண்டு பண்டாக்க வுறுதிராகில்
மாணி யுருவாய் உலகளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீரென்னைக் காக்கவேண்டில்
ஆய்ப்பாடிக்கே யென்னை யுய்த்திமின்.

12-வது திருமொழி (மற்றிருந்தீர்) - 2.

# சிதம்பரதேவர் சரிதம்.

[730-வது பக்கத் தொடர்ச்சி]

## 10. வேட்டை

குலசேகரப் பெருமாள் உத்திரவுசெய்தபடி மறுநாள் உதயத்தில், வேட்டைநாய்கள் ஈட்டி குந்தம் வில் அம்பு முதலியவைகளுடன் வேட்டைக்காரர்கள் எங்கும் பரவினர். அரசனும் பிரயாணமாயினன். அரசனைவிட்டு மந்திரி இருத்தலாற்றாமையால் விக்ரமசேனன் மஹாதேவரை யழைத்து, "நீர் இராஜாங்கத்தை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பராக்கிரமசேகரன் யாதொரு வஞ்சனையும் செய்யாமல் காத்துவரவேண்டும். அரசனைவிட்டு யான் இங்கிருக்கத்தகாது. இராஜகுமாரிகளின் விஷயத்தில் நீர் யாதொரு சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. யான் இவ்வளவு சொன்னாற் போதாதா" என்று திட்டம்செய்து அரசனை ஆயுதபாணியாய்த் தொடர்ந்தான். பராக்கிரமசேகரனும் புதல்வர்களும் ஆயுதமேந்தி வேட்டைக்கு வரக்கண்டு அச்சமுற்று அரசனைப் பிரியாதிருக்க வேண்டிய முயற்சிசெய்தான். குடிகளில் அனேகர் அரசனைப் பின்தொடர்ந்தனர். விக்ரமசேனன் இரகஸ்யச் சேவகர்கள் காவல்புரிய அரசனையும் மந்திரியையும் சூழ்ந்து சென்றனர். இப்படி நெடுந்தூரஞ் செல்லவே இருள் நெருங்கிற்று. கோமளாங்கன் தகப்பனிடமும் தமயனிடமும் விடைபெற்று இரகஸ்யமாய் நாடுசென்றனன். அரசனைக் கவனித்திருந்தமையால் இரவில் நடந்ததைக் கவனிக்க முடியாமல் மறுநாள் சேனைகளிடையில் கோமளாங்கனைக் காணாததால் விக்ரமசேனன் திகைத்து "ஏதோ மோசம் நடக்கப் போகின்றது. எனினும், மஹாதேவரும் மாளவதேச அரசகுமாரர்களு மிருக்க நாம் பயங்கொள்வானேன். அரசகுமாரர்கள் தீரத்திற்குக் கோமளாங்கன் ஓர் உரு" என்று திடங்கொண்டு அரசனைப் பிரியாமற் சென்றான். யாவரும் ஓர் வனத்தை முற்றுகையிட்டு அதில் வாழும் மிருகங்களை வதைக்கத் தலைப்பட்டனர். உயிர்தப்பி ஓடினவை போக, வதைக்கப்பட்டவை ஓர் குன்றுபோற் குவிந்தன. பிறகு வேறுவனஞ் சென்று அங்கு மிருந்த மிருகங்களை அழித்தனர்.

இப்படி இரண்டு மூன்று நாட்கள் வரையிலும் பற்பல வனங்களிற் சுற்றித் திரிந்து மிருகங்களை நாசப்படுத்திக் கொண்டு அதிக தூரஞ் சென்று வேட்டையாடிக் களைத்து ஓர் நதிக்கரையில் தண்டிறங்கி இளைப்பகற்றி மறுநாள் அடர்ந்து நீண்டு இருண்ட ஓர் அரண்யத்தை எய்தினர். அதில் மரங்கள் பருத்து வளர்ந்து அவ்வனமெங்கும் இருளச்செய்தன. அதிலனேக துஷ்ட மிருகங்கள் வசித்திருந்தன. வேடுவர் நாய்களை விட்டு இரைச்சலுண்டாக்கவே அனேக மிருகங்கள் வெளிப்பட்டன. ஒவ்வொரு யுத்தவீரனும் அனேகமனேக மிருகங்களை எதிர்த்தனன். மிருகங்களைத் துரத்துவதிலும் துஷ்ட மிருகங்களை வதைப்பதிலும் முயற்சியாயிருந்தனர். விக்ரமசேனன் அரசனைப் பிரியாமற் றொடர்ந்துகொண்டேயிருந்தான். சோமபாலன் அவர்களைத் தந்தைக்குச் சுட்டிக் காண்பித்து, "நாம் கோமளாங்கன் சொன்னபடி முயன்றிருந்தால் அரசனைத் தனிப்படுத்துவ தெங்கனம்? விக்ரமசேனனுடைய புஜபலத்தையும் அவன் புரவியின் மிகுந்த வேகத்தையும் பார்த்தீர்களா" என்றுரைக்கையில் ஒரு பெரிய வேங்கை அரசனருகில் வெளிப்பட்டுத் தப்பித்துக் கொண்டு அதிவேகமாய் ஓடத் தலைப்பட்டது. அரசனதைத் துரத்திச் சென்றான். மந்திரியும் விடாது பின்சென்றான். வெகுதூரஞ் செல்லவே அரசன் புரவி தாகத்தாற் பரிதபித்துப் பின்வாங்க அரசன் விடாமல் வேங்கையைத் தொடர்ந்து சென்றான் அவ்விலங்கு ஓர் மலைச்சாரலைநோக்கியோடிற்று. அப்போது அரசனுக்குப் பின்புறம் இடிமுழக்கம் போலொரு கர்ச்சனை கேட்டது. திரும்பிக் கர்ச்சனை கேட்ட விடத்தை நோக்க ஒரு பெரும்புலி தன்னைத் தொடர்வதைக் கண்டான். அதை எதிர்க்க முயலுகையில் பயந்து ஓடி முன்செல்லும் வேங்கை கர்ச்சனையைக் கேட்டுத் தன் துணைவி உதவிக்கு வந்ததெனத் தெரிந்து மறுகர்ச்சனை செய்துகொண்டு அரசனை எதிர்க்கச் சென்றது. முன்வந்த வேங்கை அரசன் மேலும் பின் வந்தது குதிரையின் மேலும் பாய்ந்தது. அரசன்மேற் பாய்ந்த வேங்கையின் செவியில் ஓர் துப்பாக்கி வெடித்துக் குண்டுபட்டு அது வீழ்ந்திறந்தது. புரவி நடுங்கிக் குதிக்க அரசன் குதிரையை விட்டுக் குதித்தான். புலி குதிரையை விட்டு அரசன் மேற்பாய மற்றொரு துப்பாக்கிக் குண்டு அவ்வேங்கையின் திறந்த வாயிற்பாய அதுவும் வீழ்ந்திறந்தது. உடனே இரண்டு இராஜகுமாரர்கள் இரண்டு மறைவிடங்களிலிருந்து அரசனுக்கிருபுறமும் தோன்றினர். அரசன் மூர்ச்சையாயினன். அவர்கள் அவனைச் சமீபத்திலோடும் ஓர் அருவியருகு கொண்டுபோய் உபசரிக்க அரசன் மூர்ச்சை தெளிந்து தாகம் தீர்ந்து களையாறி, அவ்விருவர் அழகையும் பார்த்து அவர்கள் புஜபலத்திற்கும் புத்தி சாமார்த்தியத்திற்கும் மெச்சி, "இன்று என் பிராணனை வேங்கைகளினின்றும் இரக்ஷித்த உத்தமர்களும் சுத்தவீரர்களுமான நீங்கள் யாவர்" என வினவினன்.

பரமார்த்தகேசரி வணங்கி, "நாங்கள் அயலூர் அரனது புத்திரர்கள். இங்கு வேட்டையாட வந்தோம். தாங்கள் களைத்திருப்பதைப் பார்த்துத் தாகந் தணித்தோம்" என்றனன். அரசன் மகிழ்ந்து "உங்களுக்குப் பிரதியுதவியாது செய்யப்போகிறேன்' என்று வருந்தத் தங்கள் பொருள்களி லெதையேனுமிச்சித்தால் தருவீரோவென, 'இச்சிக்கும் பொருளைத் தந்தோ' மென்று அரசனுரைக்குமளவில் விக்ரமசேனன் புரவிமேல் வரும் அரவங்கேட்டு யாவரும் அத்திசை நோக்கி நின்றனர். விக்ரமசேனன் உருவிய வாளொரு கையிலும் துப்பாக்கியொன்று மறுகையிலுமேந்தி அருகில்வந்து இராஜனையும் இராஜகுமாரர்களையும் பார்த்து மகிழ்ந்து வாளையுந் துப்பாக்கியையும் உறைகளிலிட்டு அரசனைநோக்கி நடந்தது யாதென, மந்திரி, "யானும்மைப் பிரிந்து அதிவேகமாய்ப் புலியைத் துரத்திக் காட்டுக்குள்வர முன்னும் பின்னுமா யிரண்டு வேங்கைகள் என்னை எதிர்க்கவும் முன்புலியை இந்த இராஜகுமாரனும் பின்னின்றதை அந்த அரசகுமாரனும் கொன்று என் பிராணனை இன்று இரக்ஷித்தார்கள். நான் களையாலுந் தாகத்தாலும் மூர்ச்சிக்க இவர்கள் உபசரிக்கக் களை தீர்ந்து இவர்களை யாவரென்றுவினவ "நாங்களும் வேட்டை நிமித்தம் இங்கு வந்தோம்; தங்களிடமிருக்கும் பொருள்களி லெதையேனுந் தருவீரா வென்றார்கள். தந்தேன் என்று கூறியவுடன் நீரும் வந்துவிட்டீர்" என்றான். விக்ரமசேனன் சிரித்து "ஸ்வாமி இவ்வாலிபர்கள் மாளவதேச மன்னர் தவத்தாலுதித்த குமாரஇரத்தினங்கள். இருவரும் இணைபிரியாது வளர்ந்து தேகமிரண்டுந் தேகியொன்றாயு மிருப்பவர்கள். தங்களுக்குத்தக்கஇணைபிரியாக் கன்னிகைகளை மணம்புரிய விரதம் பூண்டிருப்பவர்கள். தேவரீர் குமாரத்திகளின் வரலாற்றைக்கேட்டு இந்த இரண்டு மாதகாலமாய் இவர் மாளவதேயத்தைவிட்டுத் தங்கள் பிதாவின் உத்திரவுப்படி பாலைவனம் வந்து நமதரச குமாரிகளின் குணாதிசயங்களைச் சோதித்து வருகின்றார்கள். இவர்களைத் தாங்கள் இப்போதுதான் பார்த்ததாக எண்ணவேண்டாம். குதிரை வியாபாரிகளாய் வந்தவர்களும் பிச்சைக்காரவேடம் பூண்டவர்களும் கோடங்கியானவர்களும் பூவாண்டிகளானவர்களும் மகாசிவராத்திரியன்று திருடர்களாய்ச்சென்று அப் பெண்மணிகளின் திருவுருவங்களை நேத்திரத்தால் திருடி வந்தவர்களும் கடைசியாய் நந்தவனத்தில் சந்யாசியும் சிஷ்யனுமாய் நிஷ்டைசாதித்துத் தேவரீரனுமதிப்படி இராஜகுமாரிகளால் பணிவிடைசெய்யப்பெற்று அவர்களெண்ணந்தெரிந்து மணவாளர்களைத் தேடப்போனவர்களுமான புண்ணிய புருஷோத்தமர்களு மிவர்களே. இப்போது தங்கள் பிராண ரக்ஷகர்களுமானார்கள். தேவரீரிடம் இச்சித்த பொருளைப்பெற வாக்குறுதியும் பெற்றார்கள். இனித் தடையின்றித்

தேவரீர் கன்னிகா இரத்தினங்களை இவ் வுத்தமர்களுக்கு மணம்புரிந்து கொடுக்கவேண்டுவதே அவர்கள் இச்சித்த பொருள்'' என்ருன்.

குலசேகரப் பெருமாள் மந்திரியின் வசனங்களை மிகுந்த ஆனந்தத்துடன் கேட்டு,மந்திரி தங்கள் இரகசியங்களை யெல்லாம் கரதலாமலகம்போல் ஆதியோடந்தமாய்த்தெரிந்து சொல்லிவிட்டார், என்று வெட்கித் தலைகுனிந்து நிற்கும் அரசகுமாரர்களை அணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு, ''மக்காள் உங்களை மறுமக்களாகப்பெற்ற என் பாக்கியமே பாக்கியம். என் கண்மணிகளான குமாரத்திகளின் சிலாக்கியமே சிலாக்கியம்'' என்று ஆசி கூறி, குமாரத்திகளை நினைத்துப்''பதிவிரதா சிரோன்மணிகளும் அஸ்தர சஸ்தரக்கியானிகளுமான நமது புத்திரிகளைப் பார்க்க நாம் நகரஞ் செல்லக் காலதாமதமின்றிப் பிரயாணப்பட நமது தளம் செல்லுவோம் வாருங்கள்'' என்று இராஜகுமாரர்களை யழைக்க அவர்கள் மகிழ்ந்து அரசனை வணங்கி ''நாங்க ளெங்களிருப்பிடஞ் செல்லவேண்டியிருக்கிறது. பட்டணம்வந்து சேருகிறோம் மன்னித்து விடைதர வேண்டு'' மென்றனர். அரசன் மந்திரியைப் பார்க்க, மந்திரி வணங்கி ''அரசே! அவர்களிஷ்டப்படி அனுப்புவதே நலம். நாம்சென்று விவாஹ முயற்சி செய்து மாளவபூபதியை வரவழைப்போம். இவர்கள் நாமங்குப்போமுன் வருவார்கள். அவர்கள் செல்வதும் ஓர் நன்மைக்கே'' என்று கூறி அரசனுடன் தளஞ் சேர்ந்து அதி துரிதமாய்ப் பிரயாணப்பட்டான்.

---

## 11. இராஜகுமாரிகளின் ஆபத்து

ஊரை நோக்கிச் சென்ற கோமளாங்கன் மறுநாள் உதயத்தில் தன் சிநேகிதர்களான பதின்மர் சேவகர்களை வரவழைத்து,''நீங்கள் இன்றிரவு இராஜகுமாரிகளிருவரையும் அவர்கள் பல்லக்கில் வைத்து அரண்யஞ் சென்று கொலைபுரிந்து வரவேண்டும் இது சேனுபதியாகிய என் தந்தையின் உத்திரவு'' என்ருன். சேவகர்கள் பயந்து ''அப்பனே பெண்களை வதைசெய்வது தர்மமல்ல. அதிலும் அவர்கள் நமதிராஜாவின் அருமைக் குமாரத்திகள். ஒன்றுமறியா நிராயுதரான பேதைகளை எப்படி வதைப்பது? இச்செய்கை தவிர மற்றெதுவும் அரசனுக்குப் பகைவராயிருந்து செய்கிறோம்,'' என, கோமளாங்கன் கடுஞ்சினங் கொண்டு ''சொன்னபடி செய்யாவிடில் இப்பொழுதே என்வாளுக்கிரையாவீர்கள்'' என்று அதட்ட, ''சரி உமதிஷ்டப்படியாகட்டும், அதினுல் வரும்பழி உமக்கேயன்றி எங்களுக்கில்லை. நாங்கள் அவர்களைச் சென்று எப்படிக்கொணர்வோம்'' என,''பல்லக்கைஎமதாண்மனைக்கருகில் காண்பீர்கள்; அதை யெடுத்துச்சென்று அவர்களரண்மனை வாயிலில் வைக்க இராஜகுமாரிகளை எடுத்து வருவார்கள். நீங்கள் அவர்களைப் பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்லுங்கள்'' என்ருன். சேவகர்கள் ஆயுதமேந்தி நடுநிசியில் பல்லக்கையெடுத்து அரசகுமாரத்திகளின் அரண்மனை வாயிலில் வைத்தனர். கோமளாங்கன் முன்சென்று அரண்மனை அதிகாரியினுதவியால் தான் ஏவியனுப்பியிருந்த தாதிகளால் ஓர் மயக்க மருந்தை அப்பெண்களருந்தும் பாலிற் கலந்து அவர்களையும் மரகதம் முதல் சில தாதிகளையும் பானம் செய்வித்து மயக்கி அரசபுத்திரிகளைப் படிவாயலிற் எடுத்து வரச் செய்தனன். சேவர்கள் அவர்களைப் பல்லக்கில் வைத்துப் பிரயாணப்பட்டனர். ''சொன்னபடி சரியாய்ச் செய்யாவிடில் உயிர்தப்பிப் பிழைக்கமாட்டீர்', என்றுரைத்துக் கோமளாங்கன் தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு தந்தையுடனும் தமயனுடனும் கலந்து உறவாடிக்கொண்டு சேனையுடன் சென்ருன்.

இதற்கிடையில், மாளவராஜபுத்திரர் இராஜபுத்திரிகளின் அரண்மனைக்கருகிலிருந்து அவர்களுடன் வசனிக்கச் சமயம் பார்த்திருந்தவர்கள், படிவாயலில் நடந்த அதிசயங்களைக்கண்டு பல்லக்கைப் பின்பற்றிச் சென்று சேவகர்கள் போம்வழியைத் தெரிந்து தங்கள் விடுதிக்குச் சென்று ஆயுதபாணிகளாய்க் குதிரைகளிலாரோகணித்துப் பல்லக்கின் பின்னர்த் தொடர்ந்து சென்றனர். சேவகர்கள் பிறகே வரும் குதிரைச் சேவகர்களைக் கவனியாது தாங்கள் செய்யநேரிட்ட வேலையைக் குறித்து யோசித்து வருத்தத்துடன் நடந்தனர். ஜாமப்பொழுதுஉதயத்திற்குமுன்ஓர்இருண்ட அரண்யத்துட் பிரவேசித்துத் தகுந்தவிடம் பார்த்துப் பல்லக்கை இறக்கினர்கள். வழி முழுதும் வீசிய குளிர்ந்த காற்றின் மகத்துவத்தால் மயக்கம் நீங்கி நித்திரை தெளிந்து தங்களை எடுத்துப்போவதும் சேவகர்கள் பல்லக்கின் பின்வருவது முணர்ந்து ''ஏதோ ஆபத்து விளைந்திருக்கின்றது, இப்போது நாம் வெளிப்பட்டால் ஏது முடியுமோ, நாம் நிராயுதராயிருக்கிறோமே'' என்று பரிதபித்து உயிர்நீங்கும் வரையில் முஷ்டியுத்தமேனும் புரிவோம் என்று பலவாருய் யோசித்துக் கொண்டிருந்தவர்களாகையால் பல்லக்கை விட்டுக் குதித்துப்பத்தடியகலநின்றுசேவகர்களைக்கவனித்துப் பிதாவின் போர்ச்சேவகர்களென் றுணர்ந்து, ''யாது காரணத்தால்நித்திரையிலிருந்தஎங்களை இவ்விருண்ட அரண்யத்திற்குக் கொணர்ந்தீர்கள்'' என்று இராஜபுத்திரிகள் வினவச் சேவகத்தலைவன் வணங்கி, ''அம்மணீ, நீங்கள் யாதோ அபசாரம் செய்தீர்களென்றும் அதனுற் சக்கரவர்த்திக்கு மானபங்க முண்டானதென்றும் உதயத்திற்குமுன் உங்களைக்கொலைசெய்யவேண்டுமென்றும் உத்திரவளித்து வேட்டைக்குச் சென்ருர். எங்கள் இராணுவத் தலைவன் எங்களை விளித்து இக்கொடிய உத்திரவை நிறைவேற்றச் சொன்னுன். மறுத்துக் கூற இயலாதாகையால் இங்கு உங்களைக் கொணர்ந்தோம். நீங்கள் கற்றவராகையால் இனிக் கொஞ்சமும் காலதாமதஞ் செய்யாமல் சக்கரவர்த்தியின் கட்டளை நிறைவேறும்படியும் உங்களுக்குக் கதி கிடைக்கும்படியும் எங்களுக்கோர் குற்றமும் வாராதபடியும் அரசனுக்கினையை நடத்தக் கடவுளைத்யானித்து உடன்படவேண்டும்'' என்று மறுமொழி சொன்னுன்.

இராஜகுமாரிகள் பிரமித்துத் திகிலடைந்து ஒன்றுந் தோன்ருமல் வெறிகொண்டவர்களைப்போல் நிற்பதைக்கண்ட சேவகத்தலைவன் இரு சேவகர்களைக் குறிப்பிட்டு அவர்களிடம் முன் தெரிவித்திருந்தபடி சைகைசெய்து அவர்கள் சிரசுகளிரண்டையும் ஏககாலத்தில் விழும்படி வாளால் வீசிவிடும்படி தெரிவித்தான். இதற்குள் துப்பாக்கி சுடப்பட்ட ஓசை ஒன்று பிறந்தது. சேவகத்தலைவன் ஓவென்றலறி வீழ்ந்திறந்தான். சேவகர்கள் திடுக்கிட்டுத் துப்பாக்கியோசை கேட்டதையும் தலைவன் ரத்தம் பீறிட்டொழுக வீழ்ந்ததையுங்கண்டு தங்கள் துப்பாக்கிகளை ஓசைகேட்டவிடமாய்த் திருப்பிச் சத்துருவை எதிர்பார்த்திருக்க இராஜகுமாரிகள் கலக்கந்தீர்ந்து தைரியம்பூண்டு தங்களருகில் நிற்கு மிருசேவகர்கள்மேற் பாய்ந்து அவர்கள் துப்பாக்கிகளைப் பிடுங்கிக்கொண்டு சேவகர்களுக்கு உதவியாய்ச் சத்துருக்களை எதிர்ப்பவர்கள்போல் நடித்துச் சேவகர்களைச் சுட்டனர். அவர்கள் திகிலடைந்து ஒருவன் பிறகே ஒருவன் குண்டுபட்டு வீழ்ந்தனன். இருபுறத்தினின்றும் பரமார்த்தகேஸரியும் புஜங்ககேஸரியும் இராஜகுமாரிகளின் இருபுறத்தும் புரவிகளின்மேற் ருேன்றினர்.



''இவர்கள்தான் நம் பிராணரக்ஷகர்கள்போல்தோன்றுகின்ருர்கள். இராஜ வடிவுடையவர்கள் சேவகர்களை நாசஞ்செய்திராராயின் நம்முயிர்போயிருக்கும். இவர்களுடன் போர்புரிவது சரியன்று'' என்று துப்பாக்கிகளை எறிந்துவிட்டுத் தலைகுனிந்து வெட்கி நின்ருர்கள். அப்பொழுது பரமார்த்தகேஸரி தன் குதிரையை நடத்திக் காந்திமதியி னருகில்வந்து, ''நீங்கள் ஆபத்தினின்றும் தப்பித்துக் கொண்டீர்கள். உங்கள் பராக்ரமத்திற்கும் தைரியத்திற்கும் மிகவும் மெச்சினேம்'' என்ருன்.இது கேட்ட காந்திமதி திடுக்கிட்டு ''நாம் முன் பணிவிடைசெய்த சந்நியாசியின் குரலாயிற்றே'' யென்று விழித்த கண் இமைக்காமற் பார்க்க அக்குறிப்பறிந்து, ''ஓ மாதுசிரோன் மணி, நாங்கள் மாளவதேச அரசகுமாரர்கள். உங்கள் இருவரையும் மணம்புரிய வெண்ணிப் பாலைவனத்தி லிரண்டொருமாதங்களாய்ப் பற்பல வேஷதாரிகளாய் உங்களுடைய மனேபாவங்களைத் தெரியத் திரிந்து நடந்ததில் சந்யாசியும் சிஷ்யனும் ஒரு வேஷமே. நீங்கள் சந்தேகிக்க வேண்டாம்'' என்றுரைத்துத் தம்பியை ஏவினுன். புஜங்கன் நெருங்கிக் காந்திமதியை வணங்கிச் சந்திரலேகையின் அருகிற் செல்லவும், அவளப்பொழுதே சந்யாசியின் சீடனைத்தெரிந்து வணங்க, ''ஏ மங்கையற்கரசி, என் தமையனுரைத்த மொழிகளைக் கேட்கவில்லையா? நானவர் தம்பி, அவர் பெயர் பரமார்த்தகேசரி, என் பெயர் புஜங்கன், உங்களிருவரின் குணசுபாவங்களை எதிர்முகமா யுணர இத்தேசம் வந்து பல வேஷங்களிட்டு உங்கள் படிவாயலிற் றிரிந்துவருவதுபோல் நேற்றும் வந்து சமயமறிந்து நேரிற்கண்டு வசனிக்க உத்தேசித்துக் காத்திருக்கையில் நான்கு சேவகர்கள் ஓர் பல்லக்கை வைத்து மறைந்திருந்தனர். 'உங்களைச் சில தாதிகள் எடுத்துவர, ஓர் மனிதன் ஆக்கினைப்படி உங்களைவிட்டுத் தாதிகள் சென்றனர். இச்சேவகர்கள் வெளிப்போந்து பல்லக்கி லுங்களைக்கிடத்தி எடுத்துச் சென்றனர். அதோ இறந்துகிடக்கும் சேவகனுடன் ஏதோ சில ரகஸியம் அம்மனிதன் கூறினுன். இவை யாவையுங் கண்டு மனந்தரியாமல் நாங்களுங்களைத் தொடர்ந்தோம். இப்பால் நடந்தவை நீங்களறியாததல்லவே'' என்று கூறி ''இதன் காரணம் உங்களுக்குத் தெரிந்திருப்பின் வெளியிடுவீர்கள்'' என்றுரைத்து அப்பெண்களை அவ்விடத்தில் ஒருவர்க்கொருவர் யோசிக்க விடுத்து இருவரும் ஓர் மரச்சார்படைந்தனர். இவர்களும் தம்முள் உரையாடினர்.

---

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[782-வதுபக்கத் தொடர்ச்சி]

### 5. மந்திரசாலைச் சருக்கம்

#### வேறு

362\. மிகுகதிர் விலங்கலார் வேந்தன் தேனுடைந்
துகுகதிர் மண்டப மொளிர வேறலும்
தொகுகதிர் சுடுவன பரப்பிச் சூழொளி
நகுகதிர் மண்டிலம் நடுவண் நின்றதே. 125.

கதிர் மிகு விலங்கலார் வேந்தன் - தேசு மிக்க வித்தியாதரவுலகத்தவருக்கு மன்னனுகிய சலனசடியரசன், தேன் உடைந்து உகுகதிர் மண்டபம் ஒளிர ஏறலும் - (அவ்வாறு உள்ளே சென்று) மலர்கள் விரியத் தேன் ஒழுகுவதும் (மணிகளின்) காந்தியோடு கூடியதுமான மண்டபம் பொலிவுறும்படி ஏறியிருந்த போது, சூழ் ஒளி நகு கதிர் மண்டிலம் - சுற்றிலும் ஒளியை வீசும் பிரகாசமான கிரணங்களோடுகூடிய சூரியன், சுடுவன தொகு கதிர் பரப்பி - வெப்பம் பொருந்திய கிரணத்தொகையைப் பரப்பிக்கொண்டு, நடுவண் நின்றது - ஆகாயத்தின் நடுவில் நின்றது.

அரசன் அவ்வாறு சென்றிருந்தபோது நண்பகல் என்றவாரும்.

---

363\. கண்டிரள் கழைவளர் கரும்பு கைமிகுத்
தொண்டிரள் வெள்ளிலை யுரிஞ்சு மோடையர்
வெண்டிரள் மணிப்புடை சிலம்ப விட்டன
வண்டிரள் கிளையொடு வளைக ளார்த்தவே 12

(இப்பாட்டின் முன் மூன்றடிகளின் பொருள் விளங்கவில்லை; மூல பாடம் சரியானதாகத் தோன்றவில்லை.)

---

364\. ஒலிவிழா வண்டினம் ஊத வூறுதேன்
மலிவிழாப் பிணையலு மணங்கொள் சாந்தமும்
பலிவிழாப் பதாகையும் பரந்து பாடுவார்
கலிவிழாக் கழுமின கடவுட் டானமே. 127.

ஒலிவிழா வண்டு இனம் ஊத - ஒலித்தல் அடங்காத வண்டின் கூட்டம் (கிளரி) உண்பதினுல், ஊறு தேன் மலி விழா - ஒழுகுந்தேன் சொரிதல் மாருத, பிணையலும் - பூமாலையும், மணம்கொள் - வாசனையுடைய, சாந்தமும் - சந்தனமும், பலி விழா - தெய்வங்களுக்குப் பலி யூட்டும் திருவிழாக் காலத்துக்குரிய, பதாகையும் பரந்து - கொடிகளும் நெருங்கி, கடவுள் தானம் - ஸ்ரீகோயில், பாடுவார் கலி விழா கழுமின - புகழ்ந்து பாடுவாருடைய பல்லியங்களினேசையோடு கூடிய திருவிழாவினுல் விளங்கியது.

---

365\. குண்டுநீர்க் குழுமலர்க் குவளைப் பட்டமும்
மண்டுநீர் மரகத மணிக்கல் வாவியும்
கொண்டுநீ ரிளையவர் குடையக் கொங்கொடு
வண்டுநீர்த் திவலையின் மயங்கி வீழ்ந்தவே 128.

[illegible] கொண்டு நீர்ப்பட்டமும் - குவளை [illegible] கொண்ட ஆழமான நீர்

188936
BL

நிறைந்த குளங்களிலும், நீர் மண்டு மரகத மணிக்கல் வாவியும் - நீர் நிரம்பிய மரகதரத்னக்கற்களால் கட்டிய சுற்றுச் சுவர்களையுடைய தடாகங்களிலும், கொண்டு-உட்புகுந்து, இளையவர் நீர் குடைய-இளைஞராகிய மைந்தர்கள் அமிழ்ந்து நீராடும்போது, வண்டு-வண்டுகள், கொங்கொடு நீர் திவலையின் - வாசனையோடுகூடி எழுந்து சிதறிய நீர்த்திவலைகளின் மீது, வீழ்ந்தவே - விரும்பிப் பாய்ந்தன.

குண்டு - ஆழம். பட்டம் - குளம். வீழ்தல் - (1) விரும்புதல் (2) பாய்ந்து விழுதல்; இங்கே இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இருபொருளும் கொண்டாம்.

---

366. பங்கயத் துகள்படு பழன நீர்த்திரை
மங்கையர் முலையொடு பொருத வாவிகள்
அங்கவ ரஞ்சனம் அழித்த சேற்றினுங்
குங்குமக் குழம்பினுங் குழம்பு கொண்டவே.

பங்கயம் துகள்படு பழனம்-தாமரைகளாகிய களைகள் அடர்ந்து வளர்ந்துள்ள வயல்களாற் சூழப்பட்ட, மங்கையர் முலையொடு பொருத நீர் திரை வாவிகள் - (நீராடும்) மகளிரின் தனங்களில் மோதும் நீரலைகளையுடைய தடாகங்கள், அங்கு அவர் அழித்த அஞ்சனம் சேற்றினும் குங்குமம் குழம்பினும் - குளிக்கும்போது அவருடைய கண்ணினின்றும் உடலினின்றும் அழிந்தொழுகிய மைக்குழம்பாலும் குங்குமக் குழம்பாலும், குழம்புகொண்ட - சேறுபட்டன.

---

367. அங்கள்வாய்க் கயம்வளர் ஆம்பல் தாம்பிடைப்
பொங்குகா டேர்பட ஞெறித்துப் பூவொடு
கொங்கைவாய்க் குழலவர் குளிப்ப விட்டன
திங்கள்வாண் முகவொளி திளைப்ப விண்டவே.

ஏர்பட ஞெறித்து தாம்பு இடை பூவொடு விட்டன - உழும் ஏரினால் நெறிக்கப்பட்டு மதகுகளின் துவாரத்தில் அரும்புகளோடு ஒதுக்கப்பட்ட, கயம் வளர் அம் கள் வாய் ஆம்பல் - குளங்களிலே வளரும் அழகிய தேன் பொதிந்த ஆம்பல்களின், பொங்கு காடு - மிகுந்த கூட்டம். கொங்கை வாய் குழல் அவர் - (நீர்க்குமிழியைப் போன்ற) முலைகளையும் (செவ்வாம்பலை யொத்த) வாயையும் (நீர்ப்பாசியை யொத்த) கூந்தலையும்உடைய பெண்கள், குளிப்ப - குளிக்கும்போது, திங்கள் வாள் முக ஒளி திளைப்ப - அம்மகளிருடைய சந்திரனைப் போன்ற காந்தியையுடைய முகங்களின் ஒளி பாய்தலால், விண்ட - மலர்ந்து விளங்கின.

ஏர்பட நெறித்துத் தாம்பிடைப் பூவொடுவிட்டன ஆம்பற்காடு, குழலவர் குளிப்ப முகவொளி திளைப்ப விண்ட, என்று கூட்டி முடிக்க.

---

368. மாயிரும் பனித்தடம் படிந்து மையழி
சேயரி நெடுமலர்க் கண்கள் சேந்தெனத்
தாயலர மறைக்கிய குவளைத் தாதுதேன்
பாய்பெரிக் திறைஞ்சினர் பாவை மார்களே 131.

369. சந்தனத் துளித்தலை ததும்பச் சாந்தனைத்
தந்தாத் தசைப்பண வால வட்டமும்
எந்திரத் திவலையு மியற்றி யீர்மணற்
பந்தருட் பாலிகைக் குவளை பாய்த்தினர். 132.

370. குரும்மணித் தாமரைக் கொட்டை சூடிய
திருமணிப் பீடமுஞ் செதுக்க மாயவும்
பருமணிப் பனிக்கென விளங்கு வான்பசி
அருமணிக் கொம்பனர் அலர வூட்டினர் 133.

(இப்பாடல்களின் பொருள் இனிது காணக்கூடவில்லை.

---

371. அன்னணம் பொழுதகண் ணகற்ற வாயிடைப்
பன்னருங் காலநூல் பயின்ற பண்புடைக்
கன்னலங் கருவியோர் கழிந்த நாழிகை
மன்னவ னடிமுத லுணர்த்தி வாழ்த்தினர். 134.

அன்னணம் பொழுது கண் அகற்ற - அவ்வாறு அவர்கள் பகற்பொழுதைப் போக்காநிற்ப, ஆயிடை - அப்பொழுது, பன் அரும் காலம் நூல் பயின்ற பண்பு உடை - ஓதி உணர்தற்கரிய காலத்தை அறியும் சோதிட நூலைப் பயின்றறிந்த தன்மையரும், கன்னல்அம் கருவியோர்-நாழிகை வட்டிலினுதவியால் பொழுதை அறிபவருமாகிய கணிகர், கழிந்த நாழிகை - சென்ற நேரத்தை, மன்னவன் அடிமுதல் உணர்த்தி-அரசனை வணங்கித் தெரிவித்து, வாழ்த்தினர் வாழ்த்தினர்.

---

372. வாரணி முலையவர் பரவ மன்னவன்
நீரணிப் பள்ளிபுக் கருளி னாரிரந்
தோரணி யின்னிய மிசைத்த வின்பமோ
டாரணி தெரியலான் அமிர்த மேயினான். 135.

வார் அணி முலையவர் பரவ - கச்சணிந்த முலையினராகிய மகளிர் பல்லாண்டுகூறி வாழ்த்த, மன்னவன் - அரசன், நீர் அணி பள்ளி புக்கருளினான் - தக்க அலங்காரங்க ளமைந்த கோயிலினுட்சென்று, நிரந்து ஏர் அணி இன்னியம் இசைத்த இன்பம் ஓடு - வரிசையாக அழகமைந்த இனிய வாத்தியங்கள் இசைத்த இன்னிசையோடு, ஆர் அணி தெரியலான் அமிர்தம் மேயினான் - அழகிய ஆத்திமாலையை அணிந்த அருகதேவனது அருளைச் சூடினான்.

நீர் - நீர்மை, நேர்மை. இன்பம் - (ஆகுபெயர்) இன்னிசை. அமிர்தம் - (ஆகுபெயர்) அருள்.

---

373. வெள்ளிழை பொலிந்தொளி துளும்பு மேனி
வள்ளிதழ் மல்லிகை மலர்ந்த மாலையன் [யன்
அள்ளிதழ்ப் புதுமல ரலர்ந்த வீதிமேற்
கள்ளிதழ்க் கண்ணியான் காலி னேகினான். 136.

வெள் இழை பொலிந்து ஒளி துளும்பு மேனியன் - வெண்மையான உடையாற் பொலிவுற்றுப் பிரகாசிக்கும் மேனியனாகிய மன்னன், வள் இதழ் மல்லிகை மலர்ந்த மாலையன் - செழித்த இதழ்களோடு கூடிய மல்லிகைமலர்களாற் கட்டிய மாலையை அணிந்தவனும், கள் இதழ் கண்ணியான் - தேன் நிறைந்த பூவிதழ்களால் தொடுத்த கண்ணியைச் சூடினவனும், அள் இதழ் புதுமலர் அலர்ந்த வீதிமேல் - அகன்ற இதழ்களை உடைய புதுமலர்கள் தூவப்பட்ட வீதியில், காலின் ஏகினான் - காலால் நடந்து சென்றான்.

---

374. பொன்னவிர் மணிக்கழல் புலம்பத் தேனினம்
துன்னலர் தொடையலிற் சுரும்போ டார்த்தெழ
மன்னவன் நடத்தொறு மகர குண்டலம்
மின்னலர்ந் திலங்குவில் விலங்க விட்டவே. 137.

பொன் அவிர் மணி கழல் புலம்ப - (காலில்) பொன்னாலும் விளங்கும் மணிகளாலும் செய்யப்பட்ட வீரக்கழல்கள் ஒலிப்பவும், துன் அலர் தொடையலில் தேன் இனம் சுரும்போடு ஆர்த்து எழ - மலர் நெருங்கத் தொடுத்த மாலையில் தேன் சுரும்பு முதலிய வண்டின் இனங்கள் ஒலித்து எழுந்து சுற்றவும், மன்னவன் நடத்தொறும் - மன்னவன் அடிபெயர்த்துவைத்து நடந்து செல்லும் போதெல்லாம், மகரகுண்டலம் - காதிலணிந்த மகர குண்டலங்கள், மின் அலர்ந்து இலங்கு வில் - மின்னல்கள் பரந்து விளங்கினாற்போன்ற ஒளியை, விட்ட - எங்கும் வீசின.

அலர்த்தொடை, என்னற் பாலது சந்தவின்பம் நோக்கி ஒற்றிடை மிகாது நின்றது.

---



# யாப்பிலக்கணம்

## செய்யுள்—கலிப்பா

[716-வது பக்கத் தொடர்ச்சி]

வெண்பா ஆசிரியப்பாக்களின் இலக்கணங்கள் இதுகாறும் இயம்பப்பெற்றன. இனி, கலிப்பாவிற்கு வருகின்றோம். வெண்பாவில் ஆகிய நூல்கள் சில உள; ஆசிரியப்பாக்களில் ஆகிய நூல்கள் அதனினும் அதிகம். கலிப்பாவிலோ நல்லந்துவனார் பாடிய கலித்தொகை தவிர வேறு நூல் இல்லை. இதுவும், கலம்பகங்களில் முதற் செய்யுளாய் வரும் கலிப்பாக்களுந்தான் இக்காலத்தில்கிடைக்கக்கூடியன. ஆதலின் இப்பாவினது இலக்கணத்தின் விரிவெல்லாம் மாணவர்களுக்கு அத்துணை அவசியமென்று எமக்குத் தோன்றவில்லை. அதுவுமன்றித் தாமே கவிபாட வேண்டுமென்று ஆசைகொள்வோர்க்கு அவசியமானவை வெண்பாவும் ஆசிரியப்பாவும், பாவினங்களில், விருத்தமும் கட்டளைக் கலித்துறையும் ஆகும்.

வெண்பாவிற்குச் செப்பலோசையும், ஆசிரியப்பாவிற்கு அகவலோசையும்போல் கலிப்பாவிற்குச் சிறப்பானது துள்ளலோசை. இத் துள்ளலோசை ஏந்திசைத்துள்ளல் அகவற்றுள்ளல் தூங்கிசைத்துள்ளல் என மூன்றுவகைப்படு மென்பதை முன்னரே கண்டுளோம்.

கலிப்பாவிற்குரிய தளை கலித்தளை. (காய்ச்சீர்முன் நிரையசை வருவது கலித்தளை). ஆயினும் வெண்பாவைப் போலல்லாது, ஆசிரியப்பாவைப்போல் கலிப்பாவினுள் வேற்றுத்தளைகள் விரினும் வரலாம். முற்றும் கலித்தளையே பெற்று வருமாயின் ஏந்திசைத் துள்ளலோசையும், கலித்தளையோடு வெண்டளையும் விரவிவருமாயின் அகவற்றுள்ளலோசையும், கலித்தளையோடு வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வருமாயின் பிரிந்திசைத் துள்ளலோசையும் பிறக்கும். இதுவும் மிகுதிபற்றியே இவ்வாறு உரைக்கப்படுகின்றது.

கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்

என்னுமிதனில் ஒன்றிரண்டு தவிர மற்ற வெல்லாம் கலித்தளையாக, ஏந்திசைத் துள்ளலோசை தோன்றுவது காண்க.

அறனின்றி யயறாற்று மம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லு நீளிடை நினைப்பவு
மிறைநில்லா வளையோட விதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறனல னிழப்பவும் வினைவேட்டாய் கேளினி

இதனில் ஆசிரியத்தளை இரண்டு மூன்று போக, கலித்தளையும் வெண்டளையுமே ஒக்கவிரவி அகவற்றுள்ளலோசை பிறப்பது காண்க.

வீறுசான் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயங்கிக் கவின்பெற
மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கித ழணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிகேளைக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோலவரும்பூழ்த்து மரமெல்லாமலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று வாரார்நம்
போதெழி லுண்கண் புலம்ப நீத்தவர்

இதனில், கலித்தளை மிகச் சிலவாகி, ஆசிரியத்தளையும் வெண்டளைகளுமே விரவிப் பிரிந்திசைத் துள்ளலோசை பிறப்பது காண்க. வேற்றுத் தளைகள் வந்த கலிப்பா இது. ஆசிரியப்பாவினுள்ளும் வேற்றுத்தளை வரலாம். இரண்டு பாக்களும் நாற்சீர் கொண்டன. எனினும், ஏகாரத்தில் முடியாதது மாத்திரமன்றி ஓசைவகையினாலேயே இது ஆசிரியப்பாவாகாமல் கலிப்பா ஆகின்றது.

கலித்தளைகள் மிகுந்து வரவேண்டுமாதலால் கலிப்பாவில் காய்ச்சீர்கள் அதிகமா யிருக்கவேண்டியது அவசியம். அதுவும், நிரையசையை முதலிலுடைய காய்ச்சீராதலும் வேண்டும். ஆதலின், புளிமாங்காய் கருவிளங்காய்ச் சீர்களுமே மிகுதியும் வரும் எனக் கொள்க. இயற்சீர்களும் வரலாம், அவைகளும் பெரும்பான்மை கருவிளஞ் சீர்களாயிருக்கும். கூவிளஞ்சீர்களும் வரலாம். தேமா புளிமாச்சீர்கள் வருதல் மிகவும் அருமை. கனிச்சீர்களும் அருகிவரலாமாயினும், நிரையசையை நடுவிலுடைய, கருவிளங்கனி கூவிளங்கனிச் சீர்கள் வாரா.

ஆசிரியப்பா வெண்பாக்களைப் போலவே கலிப்பாவிற்கும் அளவடிகளே உரியவை.

மற்றிருபாக்களைப் போலல்லாமல் பொருளின் போக்கிற் கேற்றபடி கலிப்பா பல உறுப்புக்களை உட்கொண்டதாயிருக்கும். தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்பன அவ்வுறுப்புக்கள். இவ்வுறுப்புக்களின் அமைப்பிற்குத் தக்கவாறு கலிப்பா, ஒத்தாழிசைக் கலிப்பா வெண்கலிப்பா கொச்சகக் கலிப்பா என மூன்று வகைப்படும். இனி ஒத்தாழிசைக் கலிப்பா,—நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனமூன்று பிரிவுகளை யுடையது.

கொச்சகக் கலிப்பா—தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சம், சிஃறாழிசைக்கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக்கொச்சகம் என ஐந்து வகைப்படும்.

எல்லா உறுப்புக்களும் வந்துள ஒரு கலிப்பாவை இங்குக் காட்டிப் பின் இப்பாவின் இலக்கணத்தைக் கற்போம் :—

நீர்கொண்ட கடலாடை நிலமகளுக் கணியான
கார்கொண்ட பொழிற்காசிக் கடிநகரங் களிதூங்க
விடமருங்கிற் சிறுமருங்குற் பெருந்தடங்க ணின்னமிர்தஞ்
சடைமருங்கி னெடுந்திரைக்கைப் பெண்ணமிர்தத் தலை
[சிறப்பக்

கண்கதுவு கடவுண்மணி தெரிந்தமரர் கம்மியன்செய்
விண்கதுவு பொலங்குடுமி விமானத்தின் மிசைப்பொலிந்
[தோய். (1)

நிற்பனவுந் தவழ்வனவு நடப்பனவு மாய்நிலத்துக்
கற்பமள விலகண்டு முறுகளைகண் காணுமே
பழங்கணுறு முயிர்க்குயிர்க் கடனீந்திப் பரங்கருணை
வழங்குபர மானந்த மாக்கடலிற் றிளைத்தாட
உரையாத பழமறையின் முதலெழுத்தி னொண்பொருளை
வரையாதுகொடுத்திடுநின் வள்ளன்மைவாழ்த்துதுமே.(2)

இவையிரண்டும் ஆறடித்தரவு.

நீரெழுத்துக் கொத்தவுட னீத்தார்க்கு நீகவில்வ
தோரெழுத்தே முழுதுமவ ரெவ்வண்ண முணர்வதுவே.

என்பணிவ துடுப்பதுதோ லெம்பிரான் றமர்களவர்
முன்பணியும் பேறுடையார் திசைமுகனு முகுந்தனுமே.

செடிகொண்முடைப் புழுக்கூடே சிற்றடியோ மிடுதிறை
றடிகளடி யார்க்களிப்ப தானந்தப் பெருவாழ்வே. [மற்

பற்பகனேற் றருந்தவரும் பெறற்கரிய பரந்தாம
மெற்புடல்விற் றளியேமுங் கொளப்பெறுவ திறம்பூதே.

நிணம்புணர்வெண் டலைக்கலன்கொ னேரிழைமுத்
[தித்திருவை
மணம்புணர்வார்க் கையனருண் மணவாளக் கோலமே.

முடைத்தலையிற் பலிகொள்வான் மூவுலகு மவரவர்தங்
கடைத்தலையிற் றிரிவதுகொல் யாம்பெறுநின் காணியே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

உளதென விலதென வொருவரொ ரளவையி
னளவினி லளவிட லரியதொ ருருவினை.

இதுவென லருமையி னெழுதரு மொழிகளு
மதுவல வெனுமெனி லெவருனை யறிபவர்.

அவனவ ளதுவெனு மவைகளி னுளனல
னெவனவ னிவனென வெதிர்தரு தகைமையை.

அறிபவ ரறிவினு ளறிவுகொ டறிவுறு
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை.

இவை நான்கும் ஈரடியராகம்.

ஆணொடு பெண்ணுரு வமைந்து நின்றனை.
பூண்முலை கலந்துமைம் புலனும் வென்றனை.
எண்வகை யுறுப்பினே ருருவெ டுத்தனை.
தொன்மறைப் பனுவலின் றொடைதொ டுத்தனை.

இவை நான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம்.

வடவரை குழைய வளைத்தனை.
மலைமகண் முலைக டிளைத்தனை.
விடமமிர் தமர விளைத்தனை.
விசயனொ டமர்செய் திளைத்தனை.
வரிசிலை மதனை யெரித்தனை.
மதகரி யுரிவை தரித்தனை.
அருமறை தெரிய விரித்தனை.
அலகில்பல் கலைக டெரித்தனை.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம்.

அழில்வி ழித்தனை. பவமொ ழித்தனை.
ஆற ணிந்தனை. மாற ணிந்தினை.
மழுவ லத்தினை. முழுந லத்தினை.
மான டத்தினை. மாணி டத்தினை.
அலகி றந்தனை. தலைசி றந்தனை.
அருள்சு ரந்தனை. இருடு ரந்தனை.
உலக ளித்தனை. தமிழ்தெ ளித்தனை.
ஒன்று மாயினை. பலவு மாயினை.

இவை பதினாறும் இருசீரோரடியம்போதரங்கம்.

அலகில்பல புவனங்க ளடங்கலுமுண் டொழிப்பாய்க்குக்
கொலைவிடமுண் டனையென்று கூறுவதோர் வீறுமே.

பயின்மூன்று புவனமுங்கட் பொறிக்கிரையாப் பாலிப்
[பாய்க்
கெயின்மூன்று மெரிமடுத்தா யென்பதுமோ ரிசையாமே.

அடியவரே முக்குறும்பு மறவெறிந்தா ரெனிலடிகள்
விடுகணைவிற் காமனைமுன் வென்றதுமோர் வியப்பாமே

இக்கூற்றின் றிருநாமத் தொருகூற்றுக் கிலக்கென்று
லக்கூற்றங் குமைத்தனையென் றிசைப்பதுமோ ரற்புதமோ

இவை நான்கும் ஈரடித்தாழிசை.

எனவாங்கு—இது தனிச்சொல்.

உலகுசூழ் கொண்ட தலைவியு நீயும்
மலைபக வெறிந்த மழவிளங் குழவியை
அமிர்தமூற் றிருக்குங் குமுதவாய்த் தேறல்
வண்டின னைப்ப மடித்தலத் திருத்திக்
கண்களிற் பருகியக் காமரு குழவி
எழுதாக் கிளவி யின்சுவை பழுத்த
மழலைநா றமிர்தம் வாய்மடுத் துண்ணச்
செஞ்செவி நிறைத்ததும் மஞ்செவிக் கடிகளென்
புன்மொழிக் கடுக்கொளப் புகட்டின
னின்னருள் விழைகுவா யிறும்பூ துடைத்தே.

இது பத்தடி நேரிசை யாசிரியச் சுரிதகம்.

இப்பாட்டு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா எனப்படுவதாகும்.

## களவியற்றுறை விளக்கம்.

### முன்னுரை.

களவியற்றுறை விளக்கம் என்னும் இந்நூல் பல வகையானுஞ் சிறப்புமிக்க நூல்களிலொன்று. இறையனாரகப்பொருளுரையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ள கலித்துறைச்செய்யுட்கள் இன்னநூலைச் சார்ந்தனவென்று சில காலங்கட்குமுன்வரை தெளியப்படாதே இருந்தது. அச்செய்யுட்களனைத்தும் பாண்டிக்கோவை யென்ற ஓரரிய கோவை நூலிலிருந் தெடுக்கப்பட்டனவென்பதை இந்நூலே தெளிவாக வுணர்த்திற்று. இக்கோவையேயன்றி திருவரங்கக்கோவை, வங்கர்கோவை, தில்லையந்தாதி, கோயிலந்தாதி, பொருளியல், களவிமாலை, கண்டனலங்காரம், பல்சந்தமாலை, களவித்தெளிவு, இன்னிசைமாலை, தமிழ்நெறி விளக்கம் முதலியவேறு பலஅரிய நூல்களும் இக்களவியற்றுறை விளக்கத்தாற் புலனாகின்றன. பொருளிலக்கணங் கற்பவருக்கும், தமிழ் - இலக்கிய சரிதத்தை ஆராய்பவர்க்கும், தேச சரித்திரத்தில் உழைத்து வருபவர்க்கும் இந்நூல் பலவரிய விஷயங்களை யுணர்த்தவல்லது. அன்றியும், கவிதைச் சுவையை நுகர விரும்புவோர்க்கும் இஃது ஓர் பெரு விருந்தாக அமைந்து கிடப்பதாம். ஆதலால், இந்நூல் தமிழ்மக்களால் விரும்பிப் போற்றப் பெறத்தக்க அருமை வாய்ந்ததென்பது ஒரு தலை.

இவ்வரிய நூலுக்கு இப்போது கிடைத்துள்ளது ஒரே கையெழுத்துப் பிரதியேயாகும். இது சென்னை அரசாங்கத்தாரது தொன்னூல் - நிலயத்திலுள்ளது. இப்பிரதியினிறுதியில் எழுதப்பெற்றுள்ள ஆங்கிலக் குறிப்பினால் இஃது ஆழ்வார் திருநகரி மலையப்பபிள்ளைக் கவிராயருக்குரிய ஏட்டுப் பிரதியினின்றும் நாதமுனிப் பிள்ளை யென்பார் 12-6-1920-ல்பிரதிசெய்ததென அறியக்கிடக்கின்றது. இப்பிரதி குறைப்பிரதியே; இதன்கண் நூலின் முதலும் இறுதியும் காணப்படவில்லை. அன்றியும், வாசிப்போர் பயனடையக்கூடாதவண்ணம் பிழை பொதிந்தும் இதழ்கள் முறைபிறழ்ந்தும் பலவாறாகக் கேடுற்றிருக்கின்றது. இடையிடையே செய்யுட்களும் வாக்கியத் தொடர்களும் மறைந்து போய்விட்டன. எனவே, எத்துணை முயன்றாலும் முழுவதுமிதனைச் செப்பஞ்செய்தல் இயலாததொன்றாம். ஆயினும் கிடைத்த நூற்பகுதி மிகவும் பயன்படக் கூடியதா யிருத்தலின் ஒருவாறு செப்பஞ் செய்து இப்போது வெளியிடப்பெறுகின்றது. செய்யுட்களும், தொடர்களும், எழுத்துக்களும் காணப்பெறாத இடங்களிற் புள்ளி நிரைத்திருக்கின்றேன். மறைந்தொழிந்த மூலத்தை யொருவாறு அனுமானிக்கக்கூடிய விடங்களில் அனுமானித்த தொடர் முதலியவற்றை இருதலைப் பகரத்திற் [ ] காட்டி யிருக்கின்றேன். மேற்கோட் செய்யுட்களில் இப்போது இடம் விளங்கினவற்றிற்கு இடங்கள் கொடுத்திருக்கின்றேன்.

யாப்பருங்கலக் காரிகை யாப்பு விஷயங்களை யெல்லாம் கலித்துறைச் செய்யுளால் விளக்குவதுபோல, இந்நூல் அகப்பொருட் செய்திகளிற் பெரும்பாலனவற்றைக் கலித்துறைச் செய்யுட்களில்அமைத்திருக்கின்றது. இதன் உரை மிகவும் பாராட்டற்பாலது. இறையனார் களவியற் சூத்திரங்களை யடிப்படையாகக் கொண்டு பரந்துபட்ட அகப்பொருட் செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள்கள் காட்டி விரித்து செல்கின்றது. இந் நூலின் பெயர் புலப்படவில்லை. தொன்னூல் - நிலயக் கையெழுத்துப் பிரதியில் 'இறையனா ரகப்பொருட்டுறைச் சங்கச் செய்யுளாக உதாரணமெழுதியது' எனக் காணப்படுகின்றது. இது, நூல் இன்னதென வுணர்தற்கு அதன் புறத்தே யெழுதிவைக்குந் தலைக்குறிப்பெனவே கொள்ளற்பாலது; நூற்பெயரன்றென்பது திண்ணம். இப்போது கொடுக்கப் பெற்றுள்ள 'களவியற்றுறை விளக்கம்' என்னும் பெயர் என்னாற் படைத்துக்கொள்ளப்பட்டதே யாகும். நூலின் பெயர்தானும் அறியக்கூடாத நிலைமையில், நூலாசிரியரைக்குறித்து யாது கூறக்கிடக்கின்றது? அவர் பெருங் கல்வியாளரென்பதொன்றே அறியலாவது.

இப்போது கிடைத்துள்ள நூற்பகுதி, பாலைக் கருப் பொருளுணர்த்துங் கலித்துறையின்மூன்றாமடியின் மூன்றாஞ் சீரோடு தொடங்குகின்றது. ஆதலால், இச் செய்யுட்கு முன்பு சுமார் பத்துக் கலித்துறைகளும் அவற்றின் உரைகளும் மூலத்தில் அமைந்திருக்கலாமென்று கொள்ளலாம். இவ்வூகத்திற் கியையக் கலித்துறைச் செய்யுட்களின் எண்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

இவ்வரிய தமிழ் நூலினைத் தமது 'கலாநிலய'ப் பத்திரிகையில் வெளியிட்டுவரும் பத்திராதிப ரவர்களுக்கு எனது நன்றி யுரிமையாகின்றது. நிகழும் ஆண்டி னிறுதிக்குள் இந்நூல் முழுவதும் வெளிவருமென்று தமிழன்பர்களுக்கு உணர்த்துங் கடப்பாடுடையேன்.



உரிய வேணுவ னத்தெலெல வெளியி
னூடு தோன்றி யுலகமெ லாம்போற்றுங்
கரிய மாணிக்க மல்லாத வேய்முத்தாங்
கையி னுலுந் தொடோமுறு கண்ணதாய்
விரியு மோட்டுமுத் தென்குற மான்முலை
விலைக்கு ளொரொகு மொரணப னேவிடை
யரிய ராவின் மடிக்கீழ்க் கிடந்தபொன்
மாணிக் கந்தரில் வாங்குவ ராளையே.

11. ... ... ... ...
... ... ... ...
... ... [மற] த்திய ரந்நில மக்கடம்பேர்
துணிவன வீந்தவ யாவுங் கருவென்று சொல்லினவே

இச்சூ... ... வெனின் பாலைக்குக் கருவறிவித்தலைக் கருதிற்று. வரலாறு:—தெய்வம் பகவதியும் ஆதித்தனும்; மா வலியழிந்த செந்நாயும் வலியழிந்த யானையும்; மரம் இருப்பையும் ஓமை.........பருந்தும் புறாவும்; பறை பூசற்பறையும் சூறைகோட்பறையும்; செய்கை நிரைகோடலும்.........ம்; யாழ் பாலையாழ்; பண் பஞ்சுரம்; தலைமகன்பேர் மீளி விடலை காளை; தலைமகள் .........ம் பாதிரிப்பூவும்; நீர் அறுநீர்க்கூவலும் அறுநீர்ச் சுனையும்; அந்நிலத்து மக்கட்பேர் ...கரு. (௰க)

12. சொல்லாஞ் மிதும்பரற் பாலைக்குரிப்பொருள் சொல்
லின்மிளி

நீ ... ... ... ...
எல்லா முணர்ந்தவர் தாமுரைத் தார்க ளிளையவரைக்
கொல்லா வகைமலைக் கச்... ... ...
... ... ... விற்றே வெனின் பாலைக் குரிப்பொரு ளறிவித்தலைக் கருதிற்று. என்னை? பிரிதலும் பிரிதனிமித் ... ... என்னை?

'வெம்பர லத்தம் வேனில் பின்பனிச்
செம்பகற கருபபணஞ் சேணிடைப் பிரிதல்
மி... ... ... மி
ரெயினர் வெறிபறை யணிகொள கொலகுறு
பறுநீர் நெல்லியம் பசுங்கா யுரமில்
செந்தெகசு கொற்றொடி பஞ்சுரம் பிறவுந்
திருந்திய பாலைத் திணையது வகையே.'
'நடுவு[நிலைத்திணையே நண்பகல்வேனிலொ]டு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே
—தொல். அகத். 11.
பின்பனி தானு முரித்தென மொழிப'
—தொல். அகத். 12.

எ... ... ... கரு மயங்கியும் வரப் பெறும். என்னை?

'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே'
—தொல். அகத். 15.

13. ... ... ... ... ...
... ... ... ... ...
எ... [காரே கூதிர்] ... முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்
கிருமூ வகைய பருவ மென்[ப]
[அவைதாம், ஆவணிமுதலா]விரண் டிரண்டாக
மேவிய திங்க ளெண்ணினர் கொளலே'
—திவாகரம்.

என்னு மிலக்கணத்தால், ஆவணியும் புரட்டாசியும் [கார்]; [ஐப்பசி] யுங் கார்த்திகையும் கூதிர்; மார்கழியுந் தையும் முன்பனி; மாசியும் பங்குனியும் பின்பனி; [சித்திரையும் வைகாசி] யும் இளவேனில்; ஆனியும் ஆடியும் வேனில் என்று அறுவகைப்பட்டவாறுங் கண்டுகொள்க. இனி மூவகைப்ப ... நான்கு திங்கட் கூடியதொரு பருவமாக வென்றவாறு. என்னை? 'ஈரிரு திங்கட் பருவ மொன்றாக
மூவகையி ... ...யரே' என்றாராகலின்.

அவை வருமாறு:—ஆவணியும் புரட்டாசியும் அற்பசியும் கார்த்திகையும் கொண்டது கார்; மார்கழியுந் தையும் மாசியும் பங்குனியும் கொண்டது பனி; சித்திரையும் வைகாசியும் ஆவணியும் [கொண்டது வேனில்] ...
... ... ... ...

இன்னு முன் சொன்ன நிலங்களைக் குறிஞ்சியும் நெய்தலுங் களவென்றும் இவை யிருதி... ... ... பாருமுளர் என்னை?

'குடவரை குறிஞ்சியுங் குணகடல் நெய்தலுங்
கடவத... ... ... ...
... ... ... ...துதம்மி
லொருதனிகுகாத லொழிந்தன வியல்பே'
'நன்னிலை மருதமுந் தென்னிலை முல்லையுந்
... ... ... துறந்தே'
'உடனிலைப் பாலை யிருவீற்று முரித்தே'

என்றாராகலின். மற்றும் வரும்வழிக் கண்டு... (௰௩)

14. ... ... ... ...
...றும் என்பதென்னுதலிற்றோ வெனின், எட்டுமணமு மவற்றிற் குதாரணமு மறிவித்தலைக் கருதிற்று.. ...[பிர]சாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பசாசம் என்றவாறு. ... (௰௪)

15. இருப... ...ண் டெழிற்பிர மங்காந்தவற்
கோருபதின் மேலிரண் டாண்டின டன்னை யுவந்தளித்
தருள்வ துறநிலை ய ... ... யதனைப்
பெருமறை யோன்கோலை யொன்றேடோப் பாமென்று
[பேசினரே

என்ப தென்னுதலிற்றோ ... ... கூடிய கூட்டமாகலானும் 'கூட்டக் கூடல் களவிற் கில்லை'யென்னு மிலக்கணத்தாலும் 'உளமாண் பொத்தகிழ... ...த காமப்புணர்ச்சி' யென்னு மிலக்கணத்தாலும் களவெனப் படாது. களவெனப் படாதாதலா லவ்வியல்பென்னுஞ் ... ... கில்லையென்ற அருத்தாபத்தியாற் களவாகாதோ வென்றாற்கு, அற்றன்று: இக்கூட்டங்கள் கற்புக்கெண்ணப்பட்ட கூட்டங்களாதலால் கற்பெனவும் படாது. அன்றியும் 'களவுங் கற்புங் கைக்கோ ளாக-வள வி லன்பி னகமெனப் படுமே'என்னுமிலக்கணத்தாற் ... ... என்றமையா லிக்களவுக்குக் குற்ற

மற்றிருப்பதோ ருறுப்பின்மையால் அகமெனவும் படாது. அகப்புறமெனில், அகமாகிய கற்பு அகப்புறமாகிய களவு பின்னுமாகக் களவுமென் றெண்ணுமையி லகப்புற மென வும் படாது. என்னே ?

‘முற்படப் புணர[ாத சொல்லி] ன்மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே’
எனவும், (இறை. 15.)
‘ஐந்திணை தழுவி யத்தமெனப் படுவது
கந்திருவ முறைமையிற் களவொடு கற்பே’

என்ருராகலின். என்றமையாலி ...ப்பாற்படுமோ என்பதுகடா. அதற்குவிடை பொருளதிகாரத்திற் கண்டு கொள்க.

[லிதருந்
15. தெய்வப் புணர்ச்சி [டும் பாங்கனிற்கூட்ட]ஞ்சேவி
தையற் புணர்ச்சிப் பகற்குறிதானு மிரவினிற்சார்ந்
துய்தற்குறியும் வரைவுகடா வுடன்போக் குணர்வு
... ... [கள] ழக்கா மென்பரே

என் - எனின், தமிழ்நெறிவிளக்கத்திற் பொருளியலுடை யாருங் களவொழுக்க மாறுவகைப்படு மென்ருர். அவை யறிவித்தலைக் கரு... ... ...ன. தெய்வப் புணர்ச்சியும் பாங்கற்கூட்டமும்தோழியாலாயகூட்டற்றித் பகற் குறியும் இரவுக்குறியும் வரைவுகடாதலும் உடன் போக்கு வலித்தலுமென அவ...அறிந்து கொள்க. (யரு)

16. காட்சியோ டையந் தெளித லெனத்தனி கட்டுரைத்த
வேட்கையின் மூன்று மொருதலைக் காமமென ...தந்தோர்
மாட்சிமை தோன்று ... கள மதிநுதல்வேய்த்
தோட்சிறு கோங்கரும் பாமென் முலைப்பூண் டுடியிடையே

என் — எனின், ஒருதலைக் காமமென்னும் அகப்புற... ...ற்று. என்னே ? ‘காட்சி முதலாக் கலவியி னொருதலை- வேட்கையிற் ருேன்றுதல் கைக்கிளை யதுதான் - கேட் போரில்லாக் கிளவிய தாகும்’ என்ருராகலின். என்னே ? காட்சி யையந் தெளிதலென. இவற்றுள் காட்சி யென் பது:

மால்வரை புரையு மாடக் கூட
லால வாயிற் பா.........ழவி...
...களைக் குறுங்கண்ணி யாக வுடைய
அழலவிர் சோதி யருமறைக் கடவுளாற்

செய்யப்பட்ட பொருளதிகாரத்தின் பொருட்டிறம்...

... ... ... ... ... ...

ழுகு......ங்கிய தலைமகன் தெய்வ மிடைநிற்கப் பான்மை யா லுய்க்கப்பட்டுக் கற்கந்து மெறிபோத்துங் கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் *கருவ......லிடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவணதோர் மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்புது[டைத்துப் பசும்பொன்] பூத்துவண்டு துவைப்பத் தண்டேன் துளிப் பதோர் வெறியுறு நறுமலர் வேங்கைகண்டாள்; கண்டு பெரிய [தோர் காதல் களிகூரத்]...........தன் செம் மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்புபுடைப்ப, அம் மணிக்கொம்பர் நடைகற்பதென நடந்து சென்று நாண் மலர் கொய்தாள்; கொய்து மரகத விளிம்படுத்த மாணிக் கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லிமண்டபத்துப் போதுறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடிப் பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து நான்றுவந்திழிதரும் [அருவி பொன்]...... கொழித்து மணிவரன்றி மரகதத்தொடு வயிரமுந்தி யணிகிளரு மாடகப்பாறைமே லதிர்குரன் முரசின் கண் ணிரட் [டவண்டு]ந் தேனும் யாழ்முரல வரிக்குயில்க ளிசைபாடத் தண்டாது தவிசும்படப் போர்க்க......... .........[பளிக்] குப்பாறை மணித்தலத்துமிசை நீலவால வட்டம் விரித்தாற்......போலவும் தலைப்பெய் தொருவ ரொருவர் நிமித்தமாகத் தமியராயெதிர்ப்படும். என்னே ?

‘சுரும்பின பூம்பொழிற் சுடர்வேற் காளை
கருந்தடங் கண்ணியைக் கண்டுமகிழ்ந் தன்று’

(வெண்பாமாலை) என்ருராகலின். அதற்குச் செய்யுள்:—

திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியி
னெல்கி யனநடைவாய்த்
துருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே.
—திருக்கோவை - 1.

* இங்கே பலவரிகள் விடுப்பட்டனவாதல் வேண்டும்.

பூமரு கண்ணிணை வ[ண்டாப்
புணர்] மென் முலையரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச்
செருச்சென்னி லந்தை வென்ற
மாமரு தா[னையெங் கோன்வை]யை
வார்பொழி லேர்மணந்த
காமரு பூங்கொடி கண்டே
களித்தவெங் கண்ணிணையே
—பாண்டிக் கோவை.

ஐயம் ஐயமாக வுள்ளது.

தெளிதல்:—தலைமகளைக் கண்ணிமைத்தன் முதலாகிய கருவிகளால் மானிட மெனத் தெளிதல். என்னே ?

[மானத் தியலு மாத]ராமெனத்
தூய்மலர்க் கோதையைத் துணிவுரைத்தன்று’ (வெண் பாமாலை) என்ருராகலின். அதற்குச்செய்யுள் வருமாறு:-

பாயும் விடையரன் றில்லையன் ஞள்படைக் கண்ணிமைக்
தோயு நிலத்தடி தூமலர் வாடுந் துயரமெய்தி [குந்
யாயு மனனே யணங்கல்ல ளம்மா முலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே.
—திருக்கோவை - 3.

தொடிவானரம[ங்] கையன்றிமைக்குங் கண்கள் தோயு
தடிவா னரந்த மலரும் புலரு மயன்றலையைத் [நிலத்
தடிவா னரன்......தாழ்சடையோன் றில்லையூசல்வல்லிக்
கொடிவா னரம்புரி யும்பொழில் வாய்வந்த கோல்வளையே
—தில்லையந்தாதி.

பாவடி யானைப் பராங்குசன் பாழிப் பகைதணித்த
தூவடிவேன் மன்னவன் கன்னித் துறைச்சுரும்பார் குவளை
பூவடி வாணெடுங் கண்ணு மிமைத்தன பூமிதன்மேற்
சேவடிதோய்வகண்டேன் றெய்வமல்லளிச்சே[யிழையே]
—பாண்டிக்கோவை.

திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலமுஞ் சேவடியுந்தோயு—மரிபரந்த
போகித முண்க ணிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே
—வெண்பாமாலை.

கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குல் மேதகு சாயலா
ளென்ன் பிறர்மகளா மாறு. —பழம்பாட்டு.

அணங்[கென்ன]லாமோ வடியிரண்டு மண்மே
லிணங்குங் குழையுடனே யேறிப்—பிணங்கிக்
குவளை விழியிமைக்குங் கொய்[மல]ர்த்தார் வாடு
மிவளை மடநெஞ்சே யாம். —கிளவித்தெளிவு.

‘கைக்கிளை பெருந்திணை யென்ருங்—கத்திணையிரண்டு மகத்திணைப் புறனே’ என்றமையால் இவை.மூன்றும் அகப்புறமானபடி யறிக. (யசு)

17. இடையா நயப்புப் பிரிவையுணர்த்த லிடமணித்...
...டைமாற லெய்த கருமை யுயிரே யெனவியத்தல்
படையார்விழிப் பாங்கியையுணர்தல் பாங்கனை நினைத்தல்
அடைவானவேழவகை[யே] புணர்ச்சி யென்றக்கினரே.

என் - னின், உரைத்த முறையானே இயற்கைப் புணர்ச்சி யெழுவகைப்பட்ட கிளவியா மென்ப தறிவித்த லைக்கருதிற்று. என்னே? நயப்பும், பிரிவுணர்த்தலும், இடமணித்தென்றலும், எய்துதற்கருமையும், உயிரெனவியத் தலும், பாங்கியை யுணர்தலும், பாங்கனை நினைதலும் என்றவாறு. அவையாவன :—நயப்பு எ-து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் றலைமகள் கேட்ப விருப் புரைத் தயர்வு நீங்குதல். என்னே ?

அழிவுபட ரெவ்வங் கூர வாயிழை
பழிதீர் நன்னலம் பாராட்டின்று’ (வெண்பாமாலை)

என்ருராகலின். அதற்குச் செய்யுள் வருமாறு:—

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டீங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவளி காணும் மகன்பணையே.
—திருக்கோவை.

வேறும் மெனநின் றிகல்மலைக்
தார்விழி[குத்துவிண்போ
யேறுந் திற] ங்கண்ட கோன்றென்
பொதியி லிரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு
மெல்லியல் செ [ந்துவர்வாய்
நாறுந் தகைமை]ய வேயரக்
காம்பல் நறுமலரே.—பாண்டிக்கோவை.




ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்ருகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.



:: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனுமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்

விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.



ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

| | |
|---|---|
| 1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் | ரூ. 1,13,55,069. |
| 1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு | 11,51,813. |
| பிரீமியம் வரும்படி | 30,83,936. |
| 1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி | 7,47,608. |

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் லைகில் இன்ஷுரன்ஸ். கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.



- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்ருவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ” ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணுரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், காலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

## 3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, கைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 8 | 0 | பையிண்டு செய்யாதது | 10 | 0 | 0 |
| காலிகோ கில்ட் | 10 | 0 | 0 | காலிகோ கில்ட் | 11 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 8 | 0 | ஆப்லெதர் கில்ட் | 12 | 0 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




# வர்த்தமானம்

இப்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நிலைமை உத்தேசித்துச் சென்னை ஐக்கோர்ட் ஜட்ஜுகள், தங்கள் சம்பளங்களைக் குறைத்துக் கொள்வதுபற்றி ஆலோசனை செய்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

***

சென்னை அரசாங்க நிர்வாக சபை அங்கத்தினர்களின் சம்பளம் ரூ 5500. இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நிலைமை ஒட்டிச் சம்பளம் 2000 ஆகச் செய்யப்படவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப் போவதாகப் பஷீர் ஆமத் அவர்கள் சட்டசபைக் கார்யாலயத்திற்கு அறிவித்துள்ளார்.

***

அதிக வேகமாக நூற்பதற்கு உதவும்படி புதிய முறையில் சர்க்காவைக் கண்டு பிடிப்பவருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாக அளிக்கப்படும் என்று அகில இந்திய சர்க்கா சங்கத்தார் அறிவிக்கின்றனர். கண்டு பிடிக்கப்பட்ட சர்க்கா குஜராத் வித்தியாபீட அதிகாரிக்கு அக்டோபர் மாதக் கடைசிக்குள் அனுப்பப் படவேண்டும். அங்கீகாரம் செய்யப்பட்ட சர்க்காவை ஆக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

***

நோபில் வெகுமதி:-1931-வது ஆண்டில்சமாதானத்திற்காக வழங்கப்படவிருக்கும் நோபில் வெகுமதியை யாருக்குக்கொடுப்பதென்று நோபில்வெகுமதிக் கமிட்டியார் ஆலோசனை செய்துவருகின்றனர் என்றும், நார்வேபத்திரிகைகள் காந்தியடிகள்,அமெரிக்க குடியரசுத் தலைவர் ஹூவர், பிரிட்டிஷ் காபினட் மந்திரி ராம்ஸே மாக்டொனல்ட் ஆய மூவரில் ஒருவர் பெறலாம் என்று எழுதிவருகின்றனவென்றும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

தேவகோட்டை ஸ்ரீ சொர்ணமூர்த்தி பெண்பாடசாலையைப் பார்வையிட்ட, கொளும்பு சாகரா கலேஜ் ஆசிரியர் திரு. V. A. சங்கரநாராயண பிள்ளை அவர்கள் இப்பாடசாலை முறையை ஏற்றுப் புகழுரையொன்று எழுதியளித்தார். இப்பள்ளியைச் சீரிய முறையில் நடத்திவரும் முருகனார் அவர்கள் பெருமையையும், இப்பள்ளியை நிறுவியுள்ள அழகப்பசெட்டியார் வண்மையையும், பலபடப்புகழ்ந்து அன்னார் பாராட்டியுள்ளார்.

***

இந்தியச் சிக்கனக் கமிட்டியார் அறிக்கை :— 30 ரூபாய் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூபாய்க்கு அரை அணு வீதமும், 30-க்குமேல் 100 வரை சம்பளம் பெறுபவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு அணு வீதமும், 100-க்கு மேல் ரூ. 500 வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு 100-க்கு 7½ வீதமும், 500-க்கு மேல் 1500 வரை சம்பளம் பெறுபவர்களுக்கு 100-க்கு 10 வீதமும், 3000 வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு 100-க்கு 20 வீதமும் சம்பளம் குறைக்கப்படலாம் என்று அரசாங்கத்தாருக்குச் சிக்கனக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கின்றனர்.

***

தேவகோட்டை சிதம்பணித் தெரு வேளா[illegible]த்தின் சார்பாகப் பிரஜோத்பத்தி [illegible] (19—9—31) மாலை 7-மணி[illegible] டம் நடைபெற்றது. அவ்வமயம் அவ்வூர் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. P. ஆதிமூலன் என்பவர் தலைமை வகித்தார். சொர்ணமூர்த்தி பெண்பாடசாலை மாணவிகள் கடவுள் வணக்கம்பாடக் கூட்டம் ஆரம்பமாயிற்று. திருநெல்வேலியைச் சேர்ந்த சிந்துப்பூந்துறை திரு. V. A. சங்கரநாராயண பிள்ளை அவர்கள் கல்வி—நாடு—கதர்—என்னும் விஷயங்களைப்பற்றி விரிவாக நீண்டதோர் பிரசங்கம் நிகழ்த்தினார். பின்னர் அவ்வூர் செவிட்டுமைப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. நடராஜன், பி.எ. அவர்கள் பெண்கல்வியின் அவசியம் என்பதைபற்றியும் சங்கம் நடத்தவேண்டிய முறைகளையும் கூறினார். பின் தலைவரவர்கள் முடிவுரைகூறக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

***

### காந்தியடிகளின் யோசனை.

வட்டமேஜை மஹாநாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டமொன்றில் காந்தியடிகள் கூறிய யோசனை வருமாறு:—"இந்தியாவிலிருந்து பிரதிநிதிகள் பலர் தங்கள் வேலையெல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பல்லாயிர மைல் கடந்து இங்கே வந்திருக்கின்றனர். அவர்கள் எதற்காக இவ்வளவுதூரம் வரும்படி அழைக்கப்பட்டனர் என்பது இன்னும் சரியாக விளங்கவில்லை. எனவே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களது நோக்கம் எதுவென முடிவாய்க் கூறிவிடவேண்டும். இல்லையேல் மஹாநாட்டால் பயனொன்றும் ஏற்படாது. முதன்முதலாகவட்டமேஜைமஹாநாட்டு விஷயமாய்ப் பிரிட்டிஷார்கொள்கை அறிவிக்கப்படவேண்டும். இரண்டாவதாக இந்திய அரசியல்திருத்த விஷயமாய்த் திட்டம் போடுவதற்கு ஒரு சப்கமிட்டி நியமனமாக வேண்டும். இல்லையேல் பேச்சும் விவகாரமும் வளருமேயல்லாது பயன் ஒன்றும் ஏற்படாது.

"பிடரல் சட்ட சபையில் மன்னர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டுமென்று ஸ்ரீமான் அப்பத்கார் கூறுவதை ஏற்கின்றேன். இந்தப் பிடரல் முறையை மன்னர்கள் ஏற்பதால், அவர்கள் தங்கள் அதிகாரம் சிலவற்றைத் தியாகமே செய்கின்றனர். இது போற்றப்படுவதற்குரியதே. இப்படித் தியாகம்செய்ய முன்வந்துள்ள மன்னர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் நாம் தரவேண்டும். இப்பிரதிநிதித்துவ நிர்ணயத்தை மன்னர்கள் கையிலேயே நான் விடுவேன்.

"வயதுமுதிர்ந்த அனைவருக்கும் ஓட்டுரிமை அளிக்கப்படவேண்டும் கல்வியோ,அல்லதுசொத்தோ இல்லாமை ஓட்டுரிமைக்கு இடையூறாயிருத்தல்கூடாது. விவசாயிகளும்,தொழிலாளரும்,மற்ற ஏழைமக்களும் ஓட்டுரிமை பெறுவது அவசியம். எளியவர் நன்மைக்கே சுயராஜ்யம் கோரப்படுகின்றதாதலால் அவ்வெளியவர் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பாத்தியதையைப் பெறவேண்டும். இப்பொழுது காங்கிரஸ் அனுஷ்டிக்கும் முறை சாலச் சிறந்ததாகும்.

" தாழ்ந்த வகுப்பினர் நலம் பாதுகாக்கப்பட அவர்களுக்குப் பிடரல்முறையில் போதுமான பிரதிநிதித்துவம் தேவையென்று சொல்லப்படுவதை நான் ஏற்கின்றேன். பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். சுயராஜ்யமுறையில் பெண்கள் தமக்குரிய ஸ்தானத்தைப் பிடரல்சபையில் பெறுதுபோவர்களே [illegible], அச்சபையை நான் பகிஷ்கரிக்கப் பின்வாங்க

KALANILAYAM.
REG. NO.: M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898 "ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதறாஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசவாக்கம், சென்னை.

:: உயர்தரமாய்ச் செய்திருக்கிறார்கள் ::
அப்படித்தானென ருசுப்படுத்துவது உங்கள் கடன்!




இன்றைக்கு ஒரு கட்டியாவது இரு கட்டிகளடங்கிய ஒரு பெட்டியாவது வாங்குக!

டாக்டர் ட்ராலியின்

- லயன் சோப் -

அதைப்பற்றிச் சொல்லப்படுவதெல்லாம் உண்மையாவென்பதை நீங்களே பரீக்ஷித்துப் பாருங்கள். இது நல்ல முறையான விண்ணப்பம். பெயரை ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள்.

:. எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ::

சோல் ஏஜண்ட்,

அ. வீர. அ. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு மதராஸ்.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணா 8.

சுகுணவதி அல்லது மணம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண டப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the E. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)